வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 03 21.11.2022 திங்கட்கிழமை இதழ் : 348 பக்கங்கள் : 16




## மாவீரர் வாரம் இன்று ஆரம்பம்!

யாழ்ப்பாணம், நவ. 21

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மாவீரர் வாரம் (நவம்பர் 21 -27) இன்றுமுதல் ஆரம்பமாகிறது.

தமிழ் மக்களின் உரிமைக்காக தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் சார்பில் ஆயுதம் ஏந்திப் போராடி வீரச்சாவடைந்தவர்களை நினைவு கூரும் முகமாக மாவீரர் வாரம் அனுஷ்டிக்கப்படுகிறது.

முதல் மாவீரர் லெப். சங்கர் வீரச்சா

15

## ஏப்ரலுக்கு பின்னரே சாதாரண தர பரீட்சை!

### கல்வி அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, நவ. 21

2022 ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சை அடுத்த வருடம் ஏப்ரல் மாதத்துக்குப் பின்னர் நடத்தப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற செய்தி

15

## 13ஐ இழந்தால் இருப்பதற்கான நிலமும் இல்லாமல் போய்விடும்!

### தமிழர் சமூக ஜனநாயக கட்சி

மட்டக்களப்பு, நவ. 21

13ஆவது திருத்தச் சட்ட மூலம் - மாகாண சபை முறை இல்லாமல் போவதற்கான ஓர் அபாயகரமான நிலை இருக்கின்றது. அதனை இல்லாமல் செய்தால் நாங்கள் நிற்பதற்கான இடமும் இல்லாமல் போய் விடும் என்ற அபாயம் இருக்கின்றது - என்று தமிழர் சமூக ஜனநாயக கட்சியின் தலைவர் திருநாவுக்கரசு சிறிதரன் (சுகு) தெரிவித்தார்.

15





# வடக்கில் பசுமை அபிவிருத்தி திட்டம்!

## மன்னார் சென்ற ஜனாதிபதி ஆலோசனை

மன்னார், நவம்பர் 21

**வடக்கு மாகாணத்தில் புதுப்பிக்கத்தக்க வலு சக்தி திட்டங்கள் மற்றும் பசுமை ஐதரசன் அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்வதற்கு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.**

நேற்று மன்னாருக்கு சென்ற ஜனாதிபதி தம்பன்னி காற்றாலை உற்பத்தி நிலையத்தையும் பார்வையிட்டார்.

இதன்போது, அடுத்த 10 ஆண்டுகளுக்கான திட்டங்கள் தொடர்பில் புதுப்பிக்கத்தக வலுசக்தி அதிகார சபை மற்றும் இலங்கை மின்சார சபைக்கு சில அறிவுறுத்தல்களை வழங்கினார்.

புவி வெப்பமயமாதலை கவனத்தில் கொண்டு பசுமை ஐதரசன் திட்டம், நீர் முகாமைத்துவ

15

## நீரில் மூழ்கி யுவதி பலி!

வடமராட்சி, நவ. 21

கடலில் நீராடிவிட்டு அருகிலிருந்த நீர்த்தேக்கத்தில் நீராடிய யுவதி ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்று கூறப்படுகின்றது.

பருத்தித்துறை - கற்கோவளம் பகுதியில் நேற்று இடம்பெற்ற இந்த சம்பவத்தில், கிளிநொச்சியை சேர்ந்த ஆனந்தராஜா அலன் மேரி (வயது 18) என்பவரே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறியவருவதாவது, கிளிநொச்சியை சேர்ந்த சிறுமி, தனது சகோதரியின் வீட்டுக்கு நண்பர்களுடன் வந்துள்ளார். இவர்கள் அண்மையிலுள்ள கடலில் நீராடி விட்டு பின்னர், அருகிலிருந்த நல்லநீர்தேக்கத்தில் நீராடினர்.

அப்போது யுவதி நீரில் மூழ்கியுள்ளார். நண்பர்களின் அபயக் குரலைக் கேட்டு அருகிலிருந்த இராணுவத்தினர் யுவதியை மீட்டு பருத்தித்துறை ஆதார மருத்துவ

15

## வெளிநாட்டவரிடம் ரூ. 12 கோடி சுருட்டிய பெண்கள் இருவர் கைது!

யாழ்ப்பாணம், நவ. 21

போலி வங்கி ஆவணங்களைப் பயன்படுத்தி வெளிநாட்டவர் ஒருவரிடம் 12 கோடி ரூபாயை மோசடி செய்த சகோதரிகள் இருவரை நிதிக் குற்றப் புலனாய்வு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

நாவாந்துறையை சேர்ந்த 30 மற்றும் 34 வயதான இரண்டு சகோதரிகளே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள், யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் வங்கி ஒன்றில் உயிரிழந்து விட்ட தமது தந்தையான வர்த்தகர் 100 கோடி ரூபாய் பணத்தையும், அதிக நகைகளையும் வைப்பிலிட்டார் என்றும்

15

## வரவு - செலவு திட்டத்துக்கு பெரமுன முழு ஆதரவு!

### அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

கொழும்பு, நவ. 21

வரவு - செலவுத் திட்டத்துக்கு சிறீ லங்கா பொதுஜன பெரமுன நிபந்தனையற்ற ஆதரவளிப்பதாக ஆளும் கட்சியின் பிரதம அமைப்பாளர் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதற்கு சிறீ லங்கா

15



## நாடு திரும்பினார் பஸில் ராஜபக்ஷ!

கொழும்பு, நவ. 21

அமெரிக்காவில் தங்கியிருந்த முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேற்று நாட்டை வந்தடைந்தார். அவர் எமிரேட்ஸூக்கு சொந்தமான ஈ.மு - 650 என்ற விமானத்தில் நேற்று காலை 8.30 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

நாட்டில் ஏற்பட்ட நெருக்கடிகளை தொடர்ந்து ஏப்ரல் மாதம் நிதி அமைச்சு பதவியை துறந்தார். பின்னரும் தொடர்ந்த

15

## பயங்கரவாத சட்டத்துக்கு பதில் புதிய சட்டம் வரும்!

### நீதி அமைச்சர் விஜயதாஸ

கண்டி, நவ. 21

நாட்டில் நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடுப்பு சட்டத்துக்கு பதில் அரசாங்கம் புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை உருவாக்கி வருகிறது என்று நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நிபுணர்களின் மிகவும் அவதானமான மதிப்பீட்டின் பின்னர் புதிய சட்டங்களை உருவாக்கி வருவதாக நேற்று கண்டியில் வைத்து அமைச்சர் கூறினார்.

தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதற்காக பயங் கரவாத தடுப்பு சட்டத்தை கொண்டுவருவது குறித்து ஆர்வமாக உள்ளோம் - என்றும் கூறினார்.

## தமிழ்த் தேசிய கட்சிகள் வெள்ளியன்று கூடுகின்றன!

### மறுநாள் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பு குழு கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 21

தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் எதிர் வரும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை சந்தித்து பேசவுள்ளனர். இந்தச் சந்திப்பை தொடர்ந்து மறுநாள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது என்று அறிய வருகிறது.

இந்த இரு சந்திப்புகளையும் கொழும்பில் சம்பந்தனின் இல்லத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

வடக்கு பிரச்னைகளை தீர்ப்பதற்காக வடக்கு பாராளுமன்ற

15

## இப்படியும் நடக்கிறது...!

நண்பர் ஒருவர் காணொலி ஒன்றை 'வட்ஸ் அப்பில்' அனுப்பி விட்டு அதைப் பார்த்த பின்னர் தன்னுடன் தொடர்புகொள்ளுங்கள் என்று கேட்டிருந்தார்.

அது முன்னிலை சோசலிஷக் கட்சியின் தலைவர் குமார் குணரட்ணம் அண்மையில் நடத்திய ஊடக சந்திப்பு ஒன்று.

அதில், அவர் சில விடயங்களை மிகத் தெளிவாக ஆங்கிலத்தில் விளக்கிக் கூறுகிறார். நீண்ட நேரம் ஓடிய அந்தக் காணொலியை முழுவதுமாகப் பார்த்து விட்டு, அதனை எதற்காக அவர் அனுப்பினார் என்பதை என் அறிவுக்கு எட்டிய வகையில் சிந்தித்துப் பார்த்தேன். ஒன்றும் பிடிபடவில்லை.

குமார் குணரட்ணம் நாட்டில் நடைபெற்ற 'அறகலய'வின் பின்னணியில் இருந்த முக்கிய அமைப்பின் தலைவர். அந்தப் போராட்டத்தின் பின்னணியில் முன்னிலை சோசலிஷ கட்சியும் ஜே. வி. பி. என்ற மக்கள் விடுதலை முன்னணியுமே இருந்தன என்பது ஒன்றும் இரகசியமானதல்ல.

அவர்களுக்கு பின்னால் யார் இருந்தார்கள் என்பதில் வேண்டுமானால் பல ஊகங்கள் இருக்கலாம். அந்த ஊடகவியலாளர் சந்திப்பில், குமார் குணரட்ணம் பொதுவாக அழுத்தி சொல்ல வருவது, உள்ளூராட்சித் தேர்தல் அல்ல இப்போது முக்கியமானது, அப்படியொரு தேர்தல் வந்தாலும் அதனுடன் சேர்ந்து சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றும் நடத்தப்படவேண்டும். 'அறகலய' காரர்களின் கோரிக்கை என்பது ஒட்டுமொத்த மக்கள் சக்தியின் கோரிக்கை, அது நாட்டில் 'சிஸ்டம் சேஞ்ச்' என்பதுதான். அந்த மாற்றங்களை உள்ளடக்கிய அரசியல் அமைப்பு ஒன்றுக்கான சர்வஜன வாக்கெடுப்பும் அடுத்து நடக்கின்ற தேர்தலுடன் இணைந்து நடத்தப்படவேண்டும்.

இதுதான், குமார் குணரட்ணம் அழுத்திச் சொல்லியிருப்பது.

இப்போது அரசியல் கட்சிகள் எல்லாமே, உள்ளூராட்சி தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பதிலேயே கவனம் செலுத்தி வருகின்றன. அப்படி தேர்தல் உரிய காலத்தில் நடத்தப்படாவிட்டால், சட்டரீதியாக அதனை எதிர்கொள்ள மாத்திரமன்றி, மக்கள் போராட்டங்கள் மூலமும் அதற்கு எதிராக வீதிக்கு இறங்குவோம் என்பதுதான் எதிர்க்கட்சிகளின் கோரிக்கையாக இருந்து கொண்டிருக்கின்றது.

ஆனால், குமார் குணரட்ணமோ அதற்கு எதிர்நிலையில் இருக்கிறார். புதிய அரசமைப்பு ஒன்றுக்காக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்கிறார்.

அந்தக் காணொலிப் பதிவை அனுப்பி வைத்த நண்பர் இதில் எதை- எப்படி பார்க்கிறார் என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

சரி அவரிடமே என்னதான் விசயம் என்று கேட்டுப்பார்ப்போமே என்று அழைப்பெடுத்தேன்.

'என்ன புரிந்தது உங்களுக்கு' என்று கேட்டார் நண்பர்.

அவரின் அந்தக் கருத்தில் என்னதான் நான் நினைக்க இருக்கிறது? என்று திரும்பக் கேட்டேன், நான்.

'ரணில் பிரதமராக வந்ததும், கோட்டாபயவிடம் விடுத்த முதலாவது கோரிக்கை என்ன?' என்று திரும்பிக் கேட்டார்.

சற்று யோசித்துவிட்டு, 'அறகலய' காரர்களுக்கு எந்த இடையூறும் செய்யக்கூடாது என்பது என்றேன். அது மாத்திரமல்ல, அவர்களின் நலன்களை கவனிக்க தனது மருமகன் ருவான் விஜயவர்த்தனவையே பொறுப்பாகவும் நியமித்திருந்தார் என்றேன்.

அவர் ஜனாதிபதி ஆகும் வரை அவர்களை அரவணைத்து, அவர்களுக்கு வேண்டிய வசதிகளையெல்லாம் செய்துகொடுத்த ரணில், பின்னர் என்ன செய்தார் என்பது இரகசியமானதல்ல.

இப்போது அதற்கும் இந்த காணொலிக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்டேன்.

அவர் என்னிடமே திரும்பிக் கேட்டார்,

எதிர்க்கட்சிகள் எல்லாமே இப்போது வரிந்துகட்டிக் கொண்டு ரணிலுக்கு எதிராக போர்க்கொடி தூக்கியிருப்பது, உள்ளூராட்சி தேர்தலை ஒத்திவைக்க அவர் எடுக்கும் முயற்சிக்குத்தான்.

இப்போது எந்த ஒரு தேர்தல் நடந்தாலும் அது பொதுஜன பெரமுனவுக்கு பெரும் பின்னடைவையே தரும். ரணில் கட்சிக்கும் சிறிய வெற்றி கிடைக்கலாம். ஆனால், எதிர்க் கட்சிகளே வெற்றி பெறுவார்கள் என்பதும் தெரிந்ததுதான். அப்படியொரு வெற்றி எதிர்க்கட்சிகளுக்கு கிடைத்தால், அது பின்னர் நடக்கும் எந்தவொரு தேர்தலிலும் தாக்கத்தை செலுத்தும்.

அதனால்தான், தான் வெற்றிபெறலாம் என்ற நம்பிக்கை தனக்கு ஏற்படும் வரை தேர்தலை நடத்தாமல் இருக்க ஜனாதிபதி ரணில் விரும்புகிறார் என்பதும் தெரிந்ததுதான்.

இப்போது, உள்ளூராட்சித் தேர்தலக்கு எதிராக அதாவது அதனை மாத்திரம் நடத்துவதற்கு எதிராக ஒரு குரல் கிளம்பியிருக்கிறதே கவனித்தீரா? ரணில் தேர்தலை ஒத்திவைக்க விரும்புகிறார் என்பது தெரிகின்றது. இந்த நேரத்தில் உள்ளூராட்சி தேர்தல் மாத்திரம் தேவையில்லை என்று இன்னுமொரு குரல் கிளம்பியிருக்கின்றது. அதுவும் ஒருவகையில் உள்ளூராட்சி தேர்தலுக்கு எதிரானதுதான்.

ரணில் எப்படியெல்லாம் காய் நகர்த்திக் கொண்டிருக்கிறார் என்பது இப்போதாவது புரிகின்றதா உங்களுக்கு என்று அந்த நண்பர் கேட்டபோதுதான், எப்படியெல்லாம் நம்மவர்கள் சிந்திக்கிறார்கள் என்பது புரிந்தது.!

- ஊர்க்குருவி

# மட்டி எடுக்கச் சென்றவரை கடல் அலை இழுத்துசென்றது!

முல்லைத்தீவு, நவ. 21

சாலை கடல் நீர் ஏரியில் மட்டி எடுக்கச் சென்ற இளைஞன் கடல் அலையால் இழுத்து செல்லப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

05 ஆம் வட்டாரம் இரணைப்பாலை புதுக்குடியிருப்பை சேர்ந்த 26 அகவையுடைய செ. நிசாந்தன் என்ற இளைஞனே கடலில் இழுத்து செல்லப்பட்டுள்ளார்.

இவரை தேடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாயார் மற்றும் பெரியம்மா ஆகியோரும் மட்டி எடுக்க சென்ற நிலையில் அவர்களின் கண்முன்னே இளைஞன் கடலில் இழுத்துச் செல்லப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நத்தார் பண்டிகைக் காலத்தில் முட்டைக்கு தட்டுப்பாடு ஏற்படும்!

## முட்டை விற்பனையாளர்கள்

கொழும்பு, நவ. 21

அரசாங்கம் நிர்ணயித்த கட்டுப்பாட்டு விலையில் முட்டையை விற்பனை செய்ய முடியாமல் வியாபாரிகள் திணறி வருவதால் தற்போது முட்டை தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

சில கடைகளில் முட்டை விலை, 55 ரூபாய் முதல் 57 ரூபாய் வரையிலும், சில கடைகளில், 50 ரூபாய்க்கும் விற்கப்படுகின்றன. முட்டையின் மொத்த விற்பனை விலை 52 ரூபாய் முதல் 54 ரூபாய் வரை உயர்ந்துள்ளதாகவும் இந்த நிபந்தனைகளால் கட்டுப்பாட்டு விலையில் முட்டை வழங்க முடியாததால் முட்டை விற்பனையை நிறுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக முட்டை விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால், நத்தார் பண்டிகைக் காலத்தில் முட்டை தட்டுப்பாடு அதிகரிக்கும் அபாயம் உள்ளதாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (ஐ)

# வீடுகளை உடைத்து திருடியவர் இளவாலை பொலிஸால் கைது!

யாழ்ப்பாணம், நவ. 21

இளவாலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உயரப்புலம் மற்றும் இளவாலைப் பகுதியில் உள்ள வீடுகளை உடைத்து 16 இலட்சம் ரூபாய் தங்க நகைகளை திருடிய சந்தேகநபர் ஒருவர் இளவாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

குறித்த சந்தேகநபர் திருடிய நகைகள் சிலவற்றை நகைக் கடையில் அடகு வைத்ததாக பொலிஸார் தெரிவித்தனர். கைதான நபரிடமிருந்து 130 மில்லிக்கிராம் ஹெரோயின், நகைகள், நகை அடகு வைத்த ஆவணம் மற்றும் 30 ஆயிரம் ரூபாய் பணம் என்பன மீட்கப்பட்டன. சந்தேகநபர் இளவாலைப் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடையவர். சந்தேகநபரை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர். (ஐ)



# அச்செழுவில் இளைஞர் கைது!

யாழ்ப்பாணம், நவ. 21

அச்செழு பகுதியில் கசிப்பு உற்பத்தி செய்த ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். அத்துடன், அவரிடமிருந்து 20 லீற்றர் கோடா, 7 லீற்றர் கசிப்பு என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் அச்சுவேலி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

29 வயது நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேகநபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-03)

# நாயின் விசுவாசத்தால் கைதானவருக்கு பிணை!

கொழும்பு, நவ. 21

பொலிஸாரால் கைது செய்யப்பட்ட தனது எஜமானரைத் தேடி பொலிஸ் சிறைக் கூண்டுக்கு அருகில் காத்திருந்த நாயால் கைதி ஒருவருக்கு பொலிஸார் பிணை வழங்கினர்.

இந்தச் சம்பவம் களுத்துறை - புலத்சிங்கள பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றுள்ளது.

பொலிஸ் சிறைக் கூண்டுக்கு அருகில் நாய் ஒன்றும் நிற்பதனைக் கண்ட பொலிஸார் அதனை விரட்டியுள்ளனர். இருப்பினும் அந்த நாய் வெளியே செல்லாது பொலிஸ் நிலையத்துக்குள்ளே பதுங்கியிருந்ததுள்ளது.

இதனைக் கண்ட பொலிஸார் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டபோது, சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு பொலிஸ் சிறைக்கூண்டில் வைக்கப்பட்டிருந்த நபர் வளர்த்த நாய் என்பது தெரிய வந்துள்ளது.

புலத்சிங்கள பிரதேசத்தில் வைத்து சந்தேக நபரைக் கைது செய்து ஜீப்பின் பின்னால் அந்த நாயும் தொடர்ந்து வந்துள்ளது. பின்னர் அந்த வளர்ப்பு நாய் இரும்பு கம்பிகள் வழியாக எஜமானைப் பார்த்துக் கொண்டிருந்ததைப் பொலிஸார் கண்டுள்ளனர்.

இதைத் தொடர்ந்தே அந்தக் கைதியை பொலிஸ் பிணையில் செல்ல அனுமதித்தனர் என்று அறிய வருகிறது. (ஐ)

# 2023 முதல் காலாண்டில் மாணவர்களுக்கு சீருடை

கொழும்பு, நவ. 21

2023ஆம் ஆண்டு முதல் காலாண்டில் மாணவர்களுக்கு பாடசாலை சீருடை வழங்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அவர் இதை தெரிவித்தார்.

மேலும், மாணவர்களுக்கான சீருடை தேவையில் 70 வீதம் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படுவதாகவும் எஞ்சிய 30 வீதமே உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுவதாகவும் தெரிவித்தார். (ஐ)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2022

"மரங்களின் மீது கரிசனை கொண்ட கடவுள் அவற்றை வரட்சி, நோய்கள், பனிச்சரிவுகள், ஆயிரமாயிரம் சூறாவளிகள் மற்றும் கடும் வெள்ளப்பெருக்குகளில் இருந்து கப்பாற்றினாலும் முட்டாள்களிடம் இருந்து மட்டும் அவரால் அவற்றைக் காப்பாற்ற முடியவில்லை."

*- ஜோன் மூர் (அமெரிக்க இயற்கையியலாளர்)*

ஈழநாடு
Eelanadu
21.11.2022 திங்கட்கிழமை

பிலவ வருடம், கார்த்திகை 05

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 205 2300**

## ரணிலின் இலக்கு?

ரணில் விக்கிரமசிங்க அடுத்த ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்வதற்குத் தயாராகி வருகின்றாரா - என்னும் கேள்விகள் எழுந்திருக்கின்றன. இவ்வாறானதொரு கேள்விக்கு அவசியமில்லை. ஏனெனில், அதனைத்தான் அவர் செய்வார். அதற்கான வாய்ப்புக்கள் அவரைப் பொறுத்தவரையில் பிரகாசமாகவே உள்ளன. சர்வதேச நாணய நிதியத்தின் கடன்தொகை கிடைக்கப் பெற்றதும் தேர்தலை நோக்கி அவர் செயல்படுவதற்கான வாய்ப்பே இருக்கின்றது. இதற்கமைவாகவே அவர் பல்வேறு நகர்வுகளை முன்னெடுத்து வருகின்றார்.

ரணில் விக்கிரமசிங்க அறிவாற்றல்கொண்ட அரசியலாவாதியாக பலராலும் நோக்கப்பட்டாலும்கூட, சாதாரண சிங்கள மக்களின் ஆதரவை அவரால் வசப்படுத்த முடிந்திருக்கவில்லை. சிங்கள - பௌத்த தேசியவாத சிந்தனைகளால் பாதிக்கப்பட்டிருக்கும் அடித்தள சிங்கள மக்கள் மத்தியில் ரணில் விக்கிரமசிங்கவை ஒரு தலைவராக நோக்கும் தன்மை மிகவும் குறைவு. இதன் காரணமாகவே, ஆளுமைமிக்க ரணில் விக்கிரமசிங்க கடந்த காலத்தில் தோல்விகளை மட்டுமே சந்தித்திருந்தார். 2005இல் ரணில் ஜனாதிபதியாகத் தெரிவாவதற்கான வாய்ப்பு மிகவும் சாதகமாக இருந்தது. எனினும், விடுதலைப் புலிகளின் தலையீட்டால் - தமிழ் மக்கள் வாக்களிப்பை தவிர்த்தமையால் கைக்கெட்டியது வாய்க்கில்லை என்னும் நிலையில் ரணில் விக்கிரமசிங்க தோல்விடைந்தார். ரணில் விக்கிரமசிங்கவை தோல்வியடையச் செய்யும் நோக்கிலேயே விடுதலைப் புலிகளின் தலைமை அவ்வாறானதொரு முடிவை எடுத்திருந்தது. மேற்குலகுக்கு சார்பான ரணில் வெற்றிபெற்றால் அவரின் வியூகங்களுக்குள் தாங்கள் சிக்குப்பட்டு விடுவோமென்றே புலிகள் எண்ணினர். இறுதியில் அந்த முடிவால் விடுதலைப் புலிகள் மேற்குலகத்தின் கோபத்துக்கு ஆளாகினர்.

ஏனெனில், ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான வலதுசாரி ஐக்கிய தேசியக் கட்சியை அதிகாரத்துக்குக் கொண்டுவருவதில் ஜோர்ஜ் டபிள்யூ. புஸ் தலைமையிலான அமெரிக்க நிர்வாகம் ஆர்வம் காண்பித்திருந்தது. அப்போதைய அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலர் ரிச்சர்ட் ஆர்மிடேஜ் இந்த விடயத்தில் பிரத்தியேக ஈடுபாட்டைக் காண்பித்திருந்தார். அந்தக் காலத்தில் இராஜாங்கத் திணைக்கள வட்டாரத்தில் ஆர்மிடேஜ் இலங்கை அலுவலகரென்று வர்ணிக்கப்படுமளவுக்கு, அவர் இலங்கை விடயத்தில் ஆர்வம் காண்பித்திருந்தார். இந்த விடயங்கள் தொடர்பில் 2003 - 2006 வரையில் இலங்கைக்கான அமெரிக்க தூதுவராக இருந்த ஜெப்ரி ஜே. லுன்ஸ்டெட் தனது ஆய்வுக் கட்டுரையொன்றில் குறிப்பிட்டிருக்கின்றார்.

2005இல் சந்தர்ப்பம் கைநழுவிப்போனதைத் தொடர்ந்து, அதன் பின்னர் ரணில் விக்கிரமசிங்கவால் ஜனாதிபதி கதிரையை கைப்பற்ற முடியவில்லை. யுத்தத்துக்குப் பின்னர் இடம்பெற்ற மூன்று ஜனாதிபதி தேர்தல்களிலும் ஜனாதிபதி வேட்பாளராக அவரால் களமிறங்க முடியவில்லை. ரணில் போட்டியிட்டால் தோல்வியேற்பட்டுவிடும் என்னும் நிலையிலேயே ஏனையவர்கள் நிறுத்தப்பட்டனர். 2015இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து அதிகாரமுள்ள பிரதமராக மீளவும் கொழும்பின் அதிகார மையத்துக்குள் கோலோச்ச முடிந்தாலும்கூட, மைத்திரி - ரணில் முரண்பாடுகளால் அதிலும் சிக்கல்கள் ஏற்பட்டன. இவ்வாறானதொரு பின்னணியில்தான் பொருளாதார நெருக்கடி மீளவும் ரணிலின் கதவைத் தட்டியிருக்கின்றது. இந்த சந்தர்ப்பத்தை கச்சிதமாகப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கில் அவர் அரசியல் நகர்வுகளை முன்னெடுத்து வருகின்றார்.

அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் யார்? இந்தக் கேள்வி வருகின்றபோது, ரணிலைத் தவிர்த்து வேறொருவரை சிந்திக்க முடியாதென்னும் நிலைமை தற்போது ஏற்பட்டிருக்கின்றது. இதனை மேலும் பலப்படுத்துவதும் வெளியிலிருப்பவர்களையும் தன்னை நோக்கி ஈர்ப்பதுமே அவரின் பிரதான அரசியல் வேலைத்திட்டமாக இருப்பதாகத் தெரிகின்றது. தமிழர்களை நோக்கி சில விடயங்களை முன்வைப்பதும் இந்த அடிப்படையில்தான் நோக்க வேண்டும். ஆனால், 2005இல் இருந்தது போன்று, ஜனாதிபதி தேர்தலின் போது தமிழ் மக்களின் வாக்களிப்பைத் தீர்மானிக்கக்கூடிய தமிழ் தலைமையொன்று இப்போதில்லை. இதனை ரணிலால் இலகுவாகக் கணிக்க முடியும். எனவே, தமிழ் வாக்குகள் தொடர்பில் கவலைப்படவேண்டிய நிலைமை தற்போதில்லை. ரணிலைப் பொறுத்தவரையில் தென்னிலங்கையின் சிங்கள தரப்புக்களை கையாளுவதே முதன்மையான நகர்வாக இருக்கும். இதற்கப்பால் ஒரு செல்வாக்குமிக்க காரணி இருக்குமெனின், அது இலங்கைத் தீவின் அரசியல்மீது செல்வாக்குச் செலுத்தக் கூடிய வெளித்தரப்புக்கள் மட்டும்தான்.

# விடுதலை புலிகளின் மாவீரர் பட்டியலில் வேறு அமைப்பினரை சேர்க்க முடியாது!

## மாவீரர் பெற்றோர் சார்பில் மூத்த போராளி அறிக்கை

*யாழ்ப்பாணம், நவ. 21*

விடுதலைப் புலிகள் அமைப்பை சேர்ந்தவர்களையும், புலிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஈரோஸ் அமைப்பினர் மற்றும் தனிக் குழுவை சேர்ந்த 10 பேரைத் தவிர வேறு எவரையும் இடைச்செலுகலாக மாவீரர் பட்டியலில் இணைக்கமுடியாது - என்று மாவீரரின் பெற்றோரின் சார்பில் புலிகளின் மூத்த போராளியான பசீர் காக்கா என்றறியப்பட்ட மு. மனோகர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நேற்று அவர் பத்திரிகைகளுக்கு அனுப்பிவைத்த அறிக்கையில் மேலும் தெரிவித்தவை வருமாறு,

தமிழீழ மாவீரர் பணிமனையினால் வெளியிடப்பட்ட மாவீரர் பட்டியலில் உள்ளோரையும், 2009 மே 15 இற்கு பின்னர் வெளியுலகத்துக்குத் தகவல் தெரிவிக்க முடியாத களச்சூழலில் வீரச்சாவடைந்த புலிகள் இயக்கப் போராளிகளையும் தவிர வேறெவரையும் இடைச்செருகலாக இணைத்து மாவீரர்களின் புகழுக்குக் களங்கம் ஏற்படுத்த வேண்டாம் என மாவீரர் அறிவிழியின் தந்தையான முத்துக்குமார் மனோகர் ஆகிய நான் சகல தரப்பினருக்கும் வேண்டுகோள் விடுக்கிறேன்.

அப்படி வேறு யாரையாவது நினைவுகூர வேண்டுமென வலியுறுத்தும் தரப்புகள் தங்கள் கட்சியின் நிறுவனர்களின் நினைவு நாளிலோ, பிறந்தநாளிலோ தனியாக நினைவு கூருவதற்கு உள்ள உரிமை பற்றி எவரும் ஆட்சேபனை தெரிவிக்க மாட்டார்கள் எனக் கருதுகிறேன். தங்கள் கட்சியின் எதிர்காலம் குறித்த கலந்துரையாடலின் முடிவில் ஏகமனதாகத் தாங்கள் எடுத்த முடிவு குறித்து சைக்கிள் சின்னத்துடன் தேர்தல் ஆணையத்தில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி என்று தம்மை அடையாளப்படுத்தும் தரப்பின் தலைவர் கஜேந்திரகுமார் தெரிவிக்கும் கருத்துக்களை காணொலி மூலம் அண்மைய நாட்களில் காணக்கூடியதாக இருந்தது. இதில் ஏனைய தரப்பினர் அனைவரையும் மாவீரர் நாளில் நினைவுகூர வேண்டுமென தாங்கள் முடிவெடுத்திருப்பதாக அவர் குறிப்பிடுகிறார்.

உலகில் ஒழுக்கததுக்கு உதாரணமான அமைப்பாகக் குறிப்பிடப்படுவது விடுதலைப் புலிகளைத்தான். புகைத்தல் உட்பட போதைப் பொருள் பாவனை, மது போன்ற விடயங்களில் கண்டிப்பாக இருப்பது புலிகளின் வரலாறு. அவர்களின் ஒழுக்கம், தலைமைக்குக் கட்டுப்படல் போன்ற விடயங்கள் உலகறிந்தது. அவ்வாறு இருக்கையில் ஏனையவர்களை இந்தப் பட்டியலில் இணைக்க முயல்வது விடுதலைப் போராட்டத்தின் அரிச்சுவடியைக்கூட இவர்கள் கற்க முனையவில்லை என்பதை எடுத்துக்காட்டுகிறது.

புலிகளைத் தவிர ஈரோஸ் இயக்கத்தவர் 266 பேரும், தனிக்குழுவாக பத்துப்பேரும் தமிழீழ மாவீரர் பணிமனையின் மாவீரர் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.


கஜேந்திரகுமார் சொல்லும் விடயங்களின் உள்நோக்கத்தைப் பார்த்தால் 13ஆவது சட்ட திருத்தத்துக்கு ஆதரவான நிலைப்பாடு கொண்டுள்ள இயக்கங்கள் - கட்சிகளுக்கு நேசக்கரம் நீட்டு வதை உணரமுடிகிறது.

தலைவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கும் சூழல் அன்றைய கால அரசியல் நிலைமைகளினால் உருவானது. போராட்ட ஆதரவாளர் குடும்பங்கள்மீது மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள், கூட்டுப்பாலியல் வல்லுறவும் கொலையும் என எல்லாவற்றையும் தெரிந்து கொண்டுதான் தமிழ்தரப்பின் ஐக்கியத்திற்காக உச்சக்கட்ட விட்டுக்கொடுப்புடன் நடந்து கொண்டார். அதற்காக மாவீரர் பட்டியலில் அவர்களை இணைக்கத் தயாராக இருக்கவில்லை. எமது பட்டியலில் உள்ள பலரை மாவீரர் ஆக்கியதே இவர்கள்தான் என்று தெரிந்து கொண்டும் இம்முயற்சியில் இறங்கினார்.

2004 தேர்தலில் கூட்டமைப்பின் சார்பில் 22 பேர் பாராளுமன்றத்துக்குத் தெரிவாகினர். இவர்கள் தலைவரைச் சந்தித்தனர். அவ்வேளை மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினரான அரியநேத்திரன் கருணாவின் பிளவின்போது அந்தத் தரப்பிலிருந்து வெளியேற முடியாத நிலையிலிருந்த போராளிகள் பின்னர் நடைபெற்ற மோதலில் கொல்லப்பட்டனர் இவர்களையும் மாவீரர் பட்டியலில் இணைக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

இயக்கத்தைப் பொறுத்தவரை யார் யாரை மாவீரர் பட்டியலில் இணைப்பது, இணைக்கக்கூடாது என்று நீங்கள் சொல்லக் கூடாது என்றார். இத்தனை வருட போராட்ட வாழ்வில் எத்தனை அதி விசுவாச நடிகர்களை அரசியலில் சந்தித்திருப்பார் தலைவர். அவர் உடனே, இவர்(அரியநேத்திரன்) அந்த மக்களின் பிரதிநிதி. தன்னுடைய  மக்களின் உணர்வைப் பிரதிபலிக்கிறார் இவர். இம் மோதலில் உயிரிழந்தவர்கள் ஏற்கெனவே எம்முடன் இருந்து விசுவாசமாகச் செயல்பட்டவர்கள்தானே என்று சொல்லி கஜேந்திரன் தன்னுடைய அளவை தான் புரிந்துகொள்ள வேண்டும். என்று மறைமுகமாக உணர்த்தினார். அப்படியிருந்தும் காணிக்கு பின்னுரித்து போட்டு எழுதுவதுபோல மாவீரர் தொடர்பான விடயங்களை முடிவெடுக்கும் ஏகபோக அதிகாரத்தைத் தலைவர் தந்துவிட்டுப் போயிருப்பதாக உணர்த்த முனைகின்றனர். எந்த இலட்சியத்திற்காக இந்த மண்ணில் மாவீரர்களானார்களோ அவர்களது ஆன்மாவைக் கொச்சைப்படுத்தும் முயற்சிகளை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியினர் கைவிட வேண்டும். எந்தக் காலத்திலும் தங்கள் பெயர் மாவீரர் பட்டியலில் இடம் பெறாது எனத் தெரிந்து கொண்டும் தம்முயிரை ஆகுதியாக்கிய மாவீரர்களும் இருக்கிறார்கள். அவர்கள் வாழ்ந்த மண்ணில் அரசியல் இலாபத்துக்காக இக்கட்சியினர் செய்யும் கோளாறுகளை நிறுத்த ஒவ்வொருவரும் தங்களாலான முயற்சிகளைச் செய்ய வேண்டும் - என்றுள்ளது. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



| | |
|---|---|
| நவம்பர் - 21 | திங்கட்கிழமை |
| சுபகிருது வருடம் - | கார்த்திகை 5 |
| நல்ல நேரம் : | 06.00 - 07.30 |
| ராகு காலம் : | 07.30 - 09.00 |
| திதி : | திரையோதசி |




**மேடம்**
நிதானமாக செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். எதிர்பார்த்த தகவல் வரும். குடும்பத்தில் இருந்த நெருக்கடிகள் தீரும். இழுபறியாக இருந்த செயல் வெற்றி பெறும். பணவரவால் மகிழ்ச்சி சேரும்.

**இடபம்**
எதிர்பார்த்தவற்றில் இழுபறி நிலை ஏற்படும். முன் யோசனையுடன் செயல்படுவது நல்லது. குடும்ப பிரச்னைகள் வந்து போகும். பிள்ளைகளின் நலனில் கவனம் செல்லும். வருமானம் வந்து சேரும்.

**மிதுனம்**
தாய்வழி உறவால் நன்மை சேரும். குடும்பத்தினர் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மனம் பலவழி களில் அலைபாயும். நண்பர்கள் ஆதரவு காட்டுவார்கள். போராடி வெற்றி பெற வேண்டிய நாள்.

**கடகம்**
எதிர்பார்ப்பு பூர்த்தியாகும். நீங்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் லாபமாகும். வெளிவட்டாரத்தில் செல்வாக்கு உயரும். தந்தைவழியில் ஆதரவு உண்டாகும். விலகிச் சென்றவர்கள் தேடி வருவர்.

**சிம்மம்**
வார்த்தைகளில் கவனம் தேவை. குடும்பத்தில் செல் வாக்கு உயரும். உறவினர் உதவியால் செயல்கள் நிறை வேறும். பணியில் உண்டான பிரச்னையை சரிசெய் வீர்கள். வருமானம் வந்தாலும் செலவும் கூடும்.

**கன்னி**
எதிர்பார்த்தவற்றில் சாதகமான நிலை உருவாகும். குடும்பத்தில் சல சலப்பு ஏற்படும். அக்கம் பக்கத்தினர் மத்தியில் செல்வாக்கு உயரும். பொன் பொருள் சேரும். திட்டமிட்டு செயல்படுவீர்கள்.

**துலாம்**
அலைச்சல் அதிகரிக்கும். எதிர்பாராத செலவால் நெருக்கடிக்கு ஆளாவீர்கள். எதிர்பார்த்த வரவில் தடையுண்டாகும். தடுமாற்றம் உண்டாகும். முயற்சி யில் கவனம் செலுத்த முடியாமல் போகும்.

**விருட்சிகம்**
தனித்திறனால் செல்வாக்கு உயரும். வேலைகளில் இருந்த தடைகள் விலகும். பணவரவால் சங்கடம் தீரும். மற்றவர்களால் முடிக்க முடியாத ஒரு பணியை நீங்கள் முடித்துக் காட்டுவீர்கள்.

**தனுசு**
வியாபாரத்தை விரிவு செய்வீர்கள். நீண்ட நாள் எண்ணம் நிறைவேறும். தொழில் மாற்றம் செய்யும் முயற்சியில் இறங்குவீர்கள். போட்டியாளர்களை சமா ளித்து வெல்வீர்கள். செல்வாக்கு உயரும்.

**மகரம்**
முயற்சிகளில் தாமதம் உண்டானாலும் முடிவு சாதகமாக அமையும். தெய்வ அருளால் முயற்சி வெற்றி பெறும். எதிர்பார்த்த ஒன்றை அடைவீர்கள். இழுபறியாக இருந்த முயற்சி நிறைவேறும்.

**கும்பம்**
செயல்களில் தடுமாற்றம் உண்டாகும். பகைவரால் சங்கடங்கள் ஏற்படும். நீங்கள் ஈடுபடும் முயற்சியில் எதிர்பார்த்த பலனை அடைய முடியாமல் போகும். எதிரிகளால் சங்கடத்திற்கு ஆளாவீர்கள்.

**மீனம்**
எண்ணம் நிறைவேறும். நண்பர் மூலம் ஒரு செயலை செய்து முடிப்பீர்கள். மனதை வாட்டிய ஒரு பிரச்னைக்கு இன்று தீர்வு காண்பீர்கள். எதிர்பார்த்த வாய்ப்பு தேடி வரும் அதன் வழியே உங்கள் நிலை உயரும்.

# ஆயிரம் அரிதாரம் பூசிவந்தாலும் தமிழனை வீழ்த்திவிட முடியாது!

## தமிழ்நாடு முதலமைச்சர்



சென்னை, நவ. 21

ஆயிரம் அரிதாரங்கள் பூசி வந்தாலும், விழித்துவிட்ட தமிழனை வீழ்த்திட முடி யாது என்று கூறியிருக்கிறார் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின்.

சமூக நீதிக்கட்சி தொடங் கப்பட்ட நாளான நேற்று அவர் தனது சமூக வலைதளத் தில் மேற்கண்டவாறு பதி விட்டார்.

"சாதியின் பெயரால் கல்வி - வேலைவாய்ப்பில் உரிமை மறுக்கப்பட்டோ ருக்கு ஒதுக்கியே தீருவது இடஒதுக்கீடு என நமது நெடும்பயணத்துக்கான முதல் அடி எடுத்து வைக்கப் பட்ட இந்நாளில், பிற்படுத் தப்பட்ட - ஒடுக்கப்பட்ட மக்களின் நலனைக் காக்க உறுதியேற்போம்.

மேலும், "தமிழர் என்ற இன உணர்வு மங்கியிருந்த காலத்தில், சூழ்ச்சியாளர்களை வீழ்த்தி, இனமானம் காத்து - அரசியல் உரிமைகளை வென்றெடுத்திட நீதிக்கட்சி உருவாக்கிய பாதை, வரலாறு காட்டும் வெளிச்சம். ஆயிரம் அரிதாரங்கள் பூசி வந்தாலும், விழித்துவிட்ட தமிழனை வீழ்த்திட முடியாது! திரா விடா.. விழி! எழு! நட!" என்று பதிவிட்டுள்ளார். (ஐ)



# 2026இல் தமிழ்நாட்டில் பா. ம. கவின் ஆட்சியே!

## அன்புமணி ராமதாஸ்

சென்னை, நவ. 21

தமிழகத்தில் 2026ஆம் ஆண்டு பாட்டாளி மக்கள் கட்சி தலைமையில் உறுதி யாக ஆட்சி அமைப்போம் என்று அந்தக் கட்சித் தலை வர் அன்புமணி தெரிவித்தார்.

கட்சி நிர்வாகிகளை சந் தித்த பின்னர் கருத்து வெளி யிடுகையிலேயே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

55 ஆண்டு காலம் இரு திராவிட கட்சிகளும் ஆட்சி செய்தது போதும் என்றமன நிலைக்கு மக்கள் வந்துவிட்ட னர். வரும் 2026 சட்டப்பேர வைத் தேர்தலில் பா. ம. க. தலைமையில் தமிழகத்தில் உறுதியாக ஆட்சிஅமைப் போம். அதை நோக்கிதான் எங்கள் அரசியல் பயணத்தை 'பா. ம. க. 2.0' மூலம் நடத்து கிறோம்.

அ. தி. மு. க. ஒரு பக்கம் நான்காக பிரிந்து இருக்கிறது. தி. மு. க. ஆட்சிக்கு வந்து ஒன்றரை ஆண்டு ஆகிவிட் டது. இன்னும் அவர்களின் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியவில்லை. ஆளுநரை முதல்வர் சந்தித்து, என்ன பிரச்னை இருந்தாலும் அதை சுமுகமான முறையில் தீர்த்து, தமிழக நலன் கருதி இருவரும் ஒன்று சேர்ந்து பணியாற்ற வேண்டும் - என் றும் கூறினார். (ஐ)

# விடுதலையான ஜெயக்குமார் மருத்துவமனையில் சேர்ப்பு!

திருச்சி, நவ. 21

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையிலிருந்து விடுதலையான ஜெயக்குமார் மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளார்.

விடுதலையான 6 பேரில் இலங்கையர் களான நால்வர் திருச்சி சிறப்பு முகாமில் அடை பட்டுள்ளனர். அங்கு இருக்கும் றொபேர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோருக்கு திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டது.

இதையடுத்து அவர்களுக்கு மருத்துவ சிகிச்சையளிக்க மருத்துவமனையில் சேர்க்க முடிவு செய்யப்பட்டது. எனினும், றொபேர்ட் பயஸ் சிகிச்சைக்கு மறுத்து விட்டார் என்று கூறப்படுகின்றது. இந்நிலையில், ஜெயக்குமார் திருச்சி அரச மருத்துவமனையில் சேர்க்கப்பட் டுள்ளார். பொலிஸ் பாதுகாப்புடன் அவருக்கு அங்கு சிகிச்சையளிக்கப்படுகின்றது. (ஐ)

# தேசிய கட்சியுடன் இணைந்து போட்டியிட்டாலே வெல்லலாம்!

## அ. ம. மு. க. கட்சி தெரிவிப்பு



சென்னை, நவ. 21

ஜெயலலிதாவின் உண் மையான தொண்டர்கள் ஒன்றிணைந்து, தேசிய கட்சி யுடன் கூட்டணி அமைத்தால் தான், வரும் பாராளுமன்றத் தேர்தலில் தி. மு. கவை வெல்ல முடியும் என அ. ம. மு. க. பொதுச் செயலாளர் தினகரன் தெரிவித்தார்.

வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட மக்களுக்கு நிவாரண உதவி வழங்கிய பின்னரே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், அ. தி. மு. க. தற்போது செயல்படாத கட்சியாக உள்ளது. இதற்கு காரணம் பழனிசாமிதான். அவர் எங்களுக்கும், ஓ. பன் னீர்செல்வத்துக்கும் மட்டு மில்லாமல் ஜெயலலிதாவுக் கும் துரோகம் செய்துள்ளார். பழனிசாமி வீழ்ந்தால்தான் அ. தி. மு. கவுக்கும், தமிழகத் துக்கும் நல்லது என்றும் அவர் சொன்னார். (ஐ)

# வடக்கு பிரச்னை தீர்வுக்கு ஜனாதிபதிக்கு உறுதுணை!

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவிப்பு

வவுனியா, நவ. 21

**நீண்டகால பிரச்னையை தீர்க்க நாம் உறுதுணையாக இருப்போம் என ஜனாதிபதி முன்னிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.**

வவுனியாவில் ஜனாதிபதி செயலகத்தின் வடக்கு அபிவிருத்தி விசேட பிரிவு அலுவலக திறப்பு விழாவில் கலந்துகொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், ஜனாதிபதி வடக்கு, கிழக்குக்கான இந்த செயலணியை திறந்து வைப்பதற்காக வருகை தந்தமைக்காக வடக்கில் இருந்து அவரை நாம் வரவேற்கின்றோம்.

வடக்கு, கிழக்குக்கு விசேடமான நிதியை அவர் பிரதமராக இருந்த போது பனைநிதியம் என உருவாக்கியிருந்தார். போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் மீள் எழுச்சிக்காக அது உருவாக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கு பிரதேசத்தின் மீள் எழுச்சிக்காக அன்றே கவனம் செலுத்தியிருந்தார். தற்போது ஜனாதிபதியாக மிகவும் முக்கியமான இந்த நடவடிக்கையை முன்னெடுக்கும் போது நாம் வாழ்த்து கூறுகின்றோம். இந்த விடயத்தில் சேர்ந்து இயங்குவோம் என உறுதியளிக்கிறோம்.

2005ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் அவர் போட்டியிட்ட போது சமஷ்டி தீர்வை முன்வைத்து போட்டியிட்டார். அந்த நேரத்தில் வடக்கு மாகாணம் கால்தடம் போட்டு விழ வைத்தது. தற்போது விழ வைத்தவர்களின் ஆதரவுடன் ஜனாதிபதியாக வந்திருக்கின்றார். மிக முக்கியமாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் தற்போது அமைச்சரவையில் இருக்கிறார்.

அவர்களுடைய ஆதரவையும் கொண்டு ஜனாதிபதியாக இருக்கும் நிலையில் இந்த நீண்டகால பிரச்னைக்கு ஒரு ஆக்கபூர்வ முடிவை எடுப்பதாக சொல்லியிருக்கிறார். அதனை தீர்ப்பதற்கும் நாம் உறுதுணையாக இருந்து செயல்படுவோம் - என்றார். (ஐ)





# பருத்தித்துறை பொலிஸாருடன் சிவில் பாதுகாப்பு குழு பேச்சு!

வடமராட்சி, நவ. 21

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் குற்றங்கள் மற்றும் போதைப் பொருளை கட்டுப்படுத்துதல் தொடர்பில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

பருத்தித்துறை பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கும் அந்தப் பகுதியின் சிவில் பாதுகாப்பு குழுவினருக்கும் இடையிலேயே இந்தக் கலந்துரையாடல் நேற்று முன்தினம் நடைபெற்றது.

பருத்தித்துறை பொலிஸ் நிலைய கேட்போர் கூடத்தில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமை பொலிஸ் பரிசோதகர் பிரியந்த அமரசிங்க தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் காங்கேசன்துறை பிரிதி பொலிஸ்மா அதிபர் விஜித குணரட்ண பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். (ஐ-02)

# 500 கிராம் ஹெரோயினுடன் கொட்டடியில் மூவர் கைது!

யாழ்ப்பாணம், நவ. 21

500 கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் புறநகர் பகுதியான கொட்டடியில் இவர்கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் புலனாய்வு பொலிஸாரே இந்தக் கைது நடவடிக்கையை மேற்கொண்டனர்.

கைது செய்யப்பட்டவர்களுக்கு ஏற்கனவே போதைப் பொருள் சார்ந்த வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன என்று கூறப்படுகின்றது.

கைதானவர்களுக்கு மாதகல் பகுதியிலிருந்து போதைப் பொருள் கிடைப்பதாகவும் தெரிவித்துள்ளனர். கைது செய்யப்பட்ட மூவரும் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளதோடு விசாரணைகளின் பின் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர். (ஐ)

# திருக்கோணேஸ்வரர் ஆலய சூழலை புனித பகுதியாக பிரகடனப்படுத்துக!

## சாவகச்சேரி பிரதேச சபையில் தீர்மானம்!

தென்மராட்சி, நவ. 21

திருக்கோணேஸ்வரர் ஆலய சூழலை பௌத்தமயமாக்கலில் இருந்து விடுவித்து புனித பிரதேச பிரதேசமாக பிரகடனப்படுத்த வேண்டும் என சாவகச்சேரி பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பிரதேச சபையின் உறுப்பினர் வைத்திலிங்கம் ஜெகதாஸ் கொண்டுவரப்பட்ட பிரேரணையே இவ்வாறு நேற்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

தொல்பொருள் என்று கூறிக்கொண்டு பல்லாயிரம் ஆண்டு கால சைவத்தமிழ் வரலாறுகளை மாற்றி அமைக்கும் நடவடிக்கைகளால் இன,மத முரண்பாடுகளை தொல்பொருள் திணைக்களம் ஏற்படுத்த முனைகின்றது இதனை அனுமதிக்க முடியாது.

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலய சூழலை பௌத்த மயமாக்கும் சதித்திட்டங்கள் இடம் பெற்று வருகின்றன. ஆகவே, உடனே அதை தடுத்து நிறுத்தி இந்த பிரதேசத்தை புனித பிரதேசமாக மாற்றப்பட வேண்டும்.

இலங்கையின் மிக தொன்மை வாய்ந்த பாடல் பெற்ற தலமாக விளங்கும் திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலயம் சைவத்தமிழ் மக்களின் பூர்வீக வரலாற்று நிலம். அந்த ஆலயம் சூழ்ந்த இடங்களில் சட்டவிரோதமாக கடைகள் அமைக்கப்பட்டு தொல்லியல் திணைக்களத்தினால் சில தான்தோன்றித்தனமான செயற்பாடுகள் முன்னெடுக்க பட்டுவருவதும் ஒட்டுமொத்த இந்துக்களின் மனங்களை வேதனை அடைய வைத்திருக்கின்றது.

தொல்பொருள் திணைக்களம் ஒரு ஆலய விடயத்திற்குள் தலையிடுகின்றது என்றால், நிச்சயம் அங்கு ஓர் இரகசிய வேலைத்திட்டமிருக்கும். இந்த பின்புலத்தை நோக்கினால், திருகோணேஸ்வர ஆலயத்தை உள்ளடக்கியவாறு, உல்லாசத்துறை அபிவிருத்தியென்னும் பெயரில் தொல்பொருள் திணைக்களம் நுழைவதானது, நீண்டகால அடிப்படையில் கோணேசர் ஆலயத்தை விழுங்கும் ஒரு செயல்பாடுதான்.

ஏனெனில் உல்லாசத்துறை அபிவிருத்தியை செய்வதற்கு பல்வேறு இடங்கள் இருக்கின்ற போது, குறிப்பாக கோணேசர் ஆலயப்பகுதியை தெரிவுசெய்ய வேண்டிய அவசியமென்ன?

எனவே அங்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் உடன் நிறுத்தப்படவேண்டும்.

கோணேசர் கோயிலில் திட்டமிட்டு நிறுவப்படும் பௌத்த மயமாக்கல் சிங்கள குடியேற்றங்கள் என்பன வற்றை தடுத்து ஆலய வளாகத்தை சூழ உள்ள பிரதேசங்களை புனித பிரதேசமாக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவே இச் செயலை கௌரவ சபை கண்டிப்பதுடன் இந்தக் கண்டன தீர்மானத்தின் பிரதிகள் ஜனாதிபதி, பிரதம மந்திரிதொல் பொருள் திணைக்களப் பணிப்பாளர் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைப்பதாகவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ஐ)

# சைவத் தமிழ் பண்பாட்டு பேரவையின் நட்பெழுச்சி நாள் நேற்று கடைப்பிடிப்பு

யாழ்ப்பாணம், நவ. 21

நல்லூர் சைவத் தமிழ் பண்பாட்டு கலைக்கூடல் அமைப்பால் நட்பெழுச்சி நாள் நேற்று ஞாயிற்றுக் கிழமை கடைப்பிடிக்கப்பட்டது.

தமிழ் கலாசார பண்பாட்டு விழுமியங்களை இளைஞர்கள் மத்தியில் பரப்பும் வேலை திட்டம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட நிலையில் நல்லூர் வீதியில் உள்ள மகேஸ்வரன் மணிமண்டபத்தில் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டு கலைக்கூடல் கடந்த ஒரு வருடத்தில் பல பண்பாட்டு விழுமிய செயல்பாடுகளை செய்துவருகின்றது. இதன் ஓர் அங்கமாக, அருகி வரும் தமிழ் பண்பாட்டு விழுமிய செயல்பாட்டில் எழுச்சியை ஏற்படுத்த முயற்சி செய்து வருகிறது.

இந்த நிகழ்வு ஒவ்வொரு மாதத்திலும் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை இடம் பெறவுள்ளது. நற் சிந்தனை, பண்ணிசை, கோலம் போடுதல், காவடியாட்டம் போன்றவற்றை இளையோர் மத்தியில் பரப்பும் நோக்கில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

நேற்றைய தினம் மாலை கட்டுதல், மாவிளக்கு போடுதல் வகுப்புகள் இடம்பெற்றன. அத்துடன், இந்துசாதனம் இத ழாசிரியர் சிவஸ்ரீ. தி.மயூரகிரி சிவாச்சார்யார் சிறப்புரை ஆற்றினார். (ஐ-03)

# சாவகச்சேரியில் பெண் சிசு மரணம்!

தென்மராட்சி, நவ. 21

சளி காரணமாக பிறந்து 50 நாட்களேயான பெண் சிசு உயிரிழந்தது.

சாவகச்சேரியை சேர்ந்த சிசுவே இவ்வாறு உயிரிழந்தது. நேற்று காலை பெண் சிசு அசைவற்று காணப்பட்ட நிலையில் பெற்றோர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு சிசுவை எடுத்து வந்தனர்.

எனினும், சிசு ஏற்கெனவே உயிரிழந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். சளி காரணமாக சிசு உயிரழந்ததாகக் கூறப்படுகிறது. (ஐ)

# 22 இலட்சம் சிறுவர்களுக்கு மனிதாபிமான உதவி தேவை!

## யுனிசெவ் அமைப்பு தெரிவிப்பு

கொழும்பு, நவ. 21

இலங்கையில் 22 இலட்சம் சிறுவர்களுக்கு மனிதாபிமான உதவிகள் அவசரமாகத் தேவைப் படுகின்றன - என்று யுனிசெவ் தெரிவித்துள்ளது.

இலங்கையில் சுமார் 56 ஆயிரம் குழந்தைகள் கடுமையான ஊட்டச் சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட் டுள்ளனர். 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு உடனடி நிவாரணம் தேவை என்று யுனிசெவ்வின் சமீபத் திய அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இதேவேளை, இலங்கையில் நில வும் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகள் காரணமாக 2022 ஆம் ஆண்டில் எந்தவொரு வெளிநாட்டு வேலைக்காகவும் நாட்டை விட்டு வெளியேறும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 286 வீதத்தால் அதிகரித் துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் 4.8 மில்லியன் குழந் தைகளுக்கு கல்வி கிடைக்க வேண்டும் என யுனிசெவ் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையில் நிலவும் பொருளா தார நெருக்கடியைக் கருத்தில் கொண்டு, இந்த ஆண்டு ஒக்டோபர் முதல் அடுத்த ஆண்டு பெப்ரவரி வரை உணவுப் பாதுகாப்பின்மை தவிர்க்க முடியாமல் மோசமடையும் என்று அவர்கள் ஊகிக்கின்றனர். மேலும் 66 ஆயிரம் பேர் கடுமையான உணவுப் பற்றாக்குறையால் பாதிக்கப்படுவர்.

இலங்கையில் உள்ள ஒவ்வொரு 5 குடும்பங்களிலும் 2 குடும்பங்கள் தமது மாதாந்த சம்பளத்தில் 75 வீதத்தை தமது உணவுத் தேவையை பூர்த்தி செய்யச் செலவிடுவதால், அந்தக் குடும்பங்கள் கல்வி மற்றும் சுகாதாரத் திற்காக மிகக் குறைந்த மூலதனத்தை ஒதுக்க முடியும் எனத் தெரிவிக்கப்படு கிறது.

பணவீக்கம் காரணமாக பெரும்பா லான குடும்பங்கள் தங்களது சேமிப் பில் பெரும்பகுதியை உணவுக்காக செலவிட்டுள்ளதாகவும், அந்த குடும் பங்கள் தங்களது அடிப்படை தேவை களை பூர்த்தி செய்ய முடியாமல் கடும் சிக்கலை எதிர்கொள்வதாகவும் அந்த அறிக்கை குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# அமெரிக்கா தடை செய்த வர்த்தகர் ஈஸ்டர் தாக்குதலுக்கு உதவினாரா?

## பொலிஸ் விசாரணை ஆரம்பம்

கொழும்பு, நவ. 21

அல்கொய்தாவுடன் வர்த்த கம் செய்வதற்காக அமெரிக்க அதிகாரிகளால் அண்மையில் தடை செய்யப்பட்ட இலங் கையரான மொஹமட் இர்ஷ ாத் மொஹமட் ஹரிஸ் நிசார் மூன்று வருடங்களுக்கு முன் னர் சஹாரான் ஹாசிம் குழுவி னர் நடத்திய உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் ஈடுபட்டாரா என் பது குறித்து இலங்கை பொலி ஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

2019 ஆம் ஆண்டு ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களில் அவ ரது பெயர் குறிப்பிடப்பட்டி ருப்பதைக் குறிப்பிட்டு, "அவர் தாக்குதல் தொடர்பான ஒரு பெரிய வலையமைப்பில் இருக் கலாம்" என்று விசாரணைகளு டன் தொடர்புடைய ஓர் ஆதா ரம் தெரிவித்ததாகக் கூறப்படு கின்றது.

பேருவளை, சைனா போர்ட் ரோட்டில் வசிக்கும் நிசார், அமெரிக்க திறைசேரியின் வெளிநாட்டு சொத்துக் கட் டுப்பாட்டு அலுவலகத்தால் கடந்த வாரம் தடைசெய்யப் பட்டிருந்தார்.

அல்-கொய்தாவின் நோக் கங்களை மேம்படுத்துவதற் காக தனிநபர்கள் மற்றும் நிதி களின் சர்வதேச இயக்கத்தை எளிதாக்குவதற்கு அமெரிக்க திறைசேரியால் முன்னர் தடை செய்யப்பட்ட வணிக பங்குதா ரர் மற்றும் உறவினரான அஹ் மத் லுக்மான் தாலிப்க்கு அல் லது ஆதரவாக பொருள் உதவி, நிதியுதவி, அல்லது பொருட்கள் அல்லது சேவை களுக்கு நிதி, பொருள் அல்லது தொழில்நுட்ப ஆதரவை வழங் கியதற்காக தடைசெய்யப்பட் டார்.

ஏற்கெனவே தடைசெய்யப் பட்ட லுக்மான் தாலிப் நிட் டம்புவ, கலேலிய பிரதே சத்தை வசிப்பவர் என்றும், அவர் வெகுகாலத்தின் முன் னரே அவுஸ்திரேலியாவிற்கு குடிபெயர்ந்து தற்போது அவுஸ்திரேலிய பிரஜை என் றும் தெரியவந்த நிலையில் விசாரணைகள் ஆழமாக சென் றுள்ளன.

அவரும் அவரின் மூத்த மகனும் (அவரது பெயர் உட னடியாக கிடைக்கவில்லை) கட்டார் அரசாங்கத்தால் 2020 இல் காவலில் வைக்கப்பட்ட னர், பின்னர் விடுவிக்கப்பட்ட னர், இப்போது கட்டாரில் வசிக்கின்றனர். இதே ஆண்டு அவர்களும் அமெரிக்க திறை சேரியால் சந்தேக நபர்களாக பெயரிடப்பட்டனர்.

அவுஸ்திரேலியாவில் உள்ள லுக்மானின் இளைய மகன் - அஹ்மத் என்றும் பெய ரிடப்பட்டுள்ளார் - அவர் ரத்தின வியாபாரத்தில் இருக் கிறார், இப்போது அவுஸ்திரே லிய அரசாங்க காவலில் உள் ளார்.

அகமதுவின் மாமியார் உறவினரே, தற்போது தடை செய்யப்பட்ட நிசார். அவர் இரத்தின வியாபாரமும் செய்து வருகிறார் என்பது விசாரணை யில் தெரியவந்துள்ளது. பேரு வளையில் உள்ள மகன் அஹ மட்டின் வீட்டிற்கு காவற் துறையினர் சீல் வைத்துள்ள னர். (ஐ)

# "பஸில் ராஜபக்ஷ வருகையால் எதுவுமே மாற்றமடையாது!"

கொழும்பு, நவ. 21

பஸில் ராஜபக்ஷ நாடு திரும்பினார் என்பதற்காக நாட்டில் புதிதாக ஒரு மாற்றமும் ஏற்படப்போவதில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று ஊடகங்களுக்கு கருத்துரைக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையி லான அரசாங்கத்தில் பஸில் ராஜபக்ஷவின் வருகையை மொட்டுக் கட்சியின் உறுப்பினர்கள் ஆரவாரத்துடன் ஏற்றுக்கொண்டனர்.

அவர் வருகை தந்தால் நாடு பிரகாசிக்கும் என்றார்கள். இறுதி யில் என்ன நடந்தது?

அவர் நிதி அமைச்சராக பொறுப்பேற்றார். நாடு வங்குரோத்து அடைந்தது. எனவே, பஸில் ராஜபக்ஷ நாடு திரும்பியதால் எந்த மாற்றமும் ஏற்படப்போவதில்லை. நாட்டில் மாற்றத்தை ஏற்படுத் துவதற்கு அவர் ஒன்றும் ஞானி கிடையாது.

நாடு வங்குரோத்து அடைந்தமைக்கான பொறுப்பை அவர் மீளவும் ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகும். ஏனெனில், நிதி அமைச்சர் என்ற முறையில் அவரின் செயல்பாடுகள், நடவடிக் கைகள் என்பன நாடு வங்குரோத்து அடைவதற்கு மற்றுமொரு காரணியாக அமைந்திருந்தது.

இந்த அரசாங்கத்தை கொண்டுநடத்துபவர் பஸில் ராஜபக்ஷ என்பது தற்போது தெளிவாகின்றது. அமைச்சுகளுக்கும் பதவிகளுக் கும் நபர்களை பரிந்துரைக்கும் பொறுப்பை அவர் திரைமறைவி லிருந்து செயல்படுத்தி வருகின்றார்.

அரசாங்கத்தையும் ஜனாதிபதியையும் இயக்கும் நூலாக பஸில் ராஜபக்ஷ திரைமறைவிலிருந்து செயல்பட்டு வருகின்றார் என்றும் அவர் கூறினார். (ஐ)

# ஓமானுக்கு சென்ற பெண்கள் பொது ஏலத்தில் விற்பனை!

## காவிந்த ஜெயவர்த்தன சாடல்

கொழும்பு, நவ. 21

சுற்றுலா வீசாவில் ஓமானுக்கு அழைத்துச் செல்லப்பட்ட 12 இலங்கைப் பெண்கள் அந்நாட்டில் விபசாரத்துக்காக பொது ஏலத்தில் விடப்பட்டனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளு மன்ற உறுப்பினர் காவிந்த ஜெயவர்த்தன குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார்.

பாராளுமன்றத்தில் விசேட அறிக்கையொன்றை விடுத்து அமைச்சர் இந்த விடயங்களை வெளிப்படுத்தியுள்ளார்.

இதற்கு பதிலளித்த நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, இது தொடர்பான விடயம் மற்றும் அது தொடர்பில் எடுக்கப்பட் டுள்ள நடவடிக்கைகள் குறித்து பொறுப்பான அமைச்சர் மற்றும் அமைச்சரவைக்கு அறிவிக்கவுள்ளதாக தெரிவித்தார். (ஐ)

# டிசெம்பர் முதல் எரிபொருட்களுக்கு மாதாந்தம் விலை திருத்தப்படும்!

## எரிசக்தி அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, நவ. 21

அடுத்த மாதம் முதல் எரிபொருட்களின் விலைகளை மாதாந்த அடிப்படையில் திருத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

பெற்றோலிய விநியோகஸ்தர்களின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எரிபொருட்களின் விலைகளை மாதாந்த அடிப்படையில் திருத்துவதற்கான பிரே ரணையை இன்று திங்கட்கிழமை அமைச் சரவையில் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ள தாக அமைச்சர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் நாட்களில் எரிபொருள் ஒதுக் கீட்டைத் தவிர்த்து சாதாரணமாக எரி



பொருளை விடுவித்ததன் பின்னர், நாளாந்த அடிப்படையில் எரிபொருள் விலையை திருத்து வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் வலியுறுத்தினார். (ஐ)

# பயங்கரவாத தடுப்பு சட்டத்தை கைவிடுவதற்கு அரசு தீர்மானம்

## பிரபல ஆங்கில வார இதழ் தகவல்!

கொழும்பு, நவ. 21

**அரசாங்கம் பயங்கரவாத தடுப்பு சட்டத்தை கைவிடத் தீர்மானித்துள்ளது - மாணவ தலைவர்ளை பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் தடுத்துவைப்பதற்கான உத்தரவில் கைச்சாத்திட ஜனாதிபதி மறுத்துள்ளார் கொழும்பிலிருந்து வெளியாகும் பிரபல ஆங்கில வார இதழ் தெரிவித்துள்ளது.**

அரசமைப்பு ரீதியாக தன்னை ஜனாதிபதியாக இணைத்துக்கொண்டு நான்கு மாதங்களின் பின்னர் ரணில் விக்கிரமசிங்க அரசியல் ரீதியிலும் மற்றைய வகையிலும் பல மாற்றங்களுக்கு தலைமை தாங்குகின்றார்.

இந்த வாரம் அவர் இரு மாணவ தலைவர்களான அனைத்து பல்கலைகழக மாணவர் ஒன்றிய ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே மற்றும் அனைத்து பல்கலைகழக பிக்குமார்மாணவர் ஒன்றிய ஏற்பாட்டாளர் கல்வேவ ஸ்ரீதம்ம தேரர் ஆகியோரை தொடர்ந்தும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் தடுத்துவைப்பதற்கான உத்தரவில் கையெழுத்திட ஜனாதிபதி மறுத்தார். அவர்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

அதேநாளில் அனைத்து பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தின் மாணவர்கள் மாணவர் தலைவர்களை விடுதலை செய்யக்கோரி ஐ. நா. அலுவலகத்தின் முன்னாள் போராட்டத்தில் ஈடுபட்டனர், அவர்களை கலைப்பதற்கு நீர்த்தாரை கண்ணீர்புகை பிரயோகம் இடம் பெற்றது.

பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் அவர்களை தடுத்து வைப்பதற்கான முன்னையை உத்தரவில் பாதுகாப்பு செயலாளர் கமால் குணரட்ண கைச்சாத்திட்டிருந்தார். அவர் தற்போது இராணுவபாதுகாப்பு குழுவொன்றுடன் பாக்கிஸ்தாளுக்கு சென்றிருந்தார் தற்போது அவர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பான வழக்குகளை அரசாங்கம் எதிர்காலத்தில் எவ்வாறு கையாளும் என்ற கேள்விக்கு நாட்டின் வழமையான சட்டங்களின் அடிப்படையில் இந்த வழக்குகள் கையாளப்படும் என அரசாங்க வட்டாரமொன்று தெரிவித்தது.

எதிர்காலத்தில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் ஏற்பாடுகளை பயன்படுத்துவதிலிருந்து அரசாங்கம் விலகிச் செல்லும் எனவும் அரசதகவல்கள் தெரிவித்தன. இலங்கை இந்த சட்டத்தை பயன்படுத்தக்கூடாது என வெளிநாட்டிலும் எதிர்கொண்டுள்ள விமர்சனங்களே இதற்கு முக்கிய காரணம்.

காலிமுகத்திடலிலும் அலரிமாளிகைக்கு வெளியேயும் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்கள் தொடர்பில் இரு மாணவ தலைவர்கள் கைது செய்யப்பட்டமை இந்த விவகாரத்தை மேலும் பிரச்னைக்கு உரியதாக மாற்றியுள்ளது. (ஐ)

# ஆதனவரியை செலுத்துமாறு மக்களை நிர்ப்பந்திக்காதீர்!

## சமத்துவ மக்கள் கட்சி வலியுறுத்து

கிளிநொச்சி, நவ. 21

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியான சூழலில் அதிககரித்துள்ள பொருட்கள் சேவைகள் விலையேற்றம் காரணமாக மக்கள் தங்கள் வாழ்வாதாரத்தை கொண்டு நடத்த முடியாத நிலையில் உள்ள போது ஆதன வரியை செலுத்துமாறு கரைச்சி பிரதேச சபை அழுத்தம் கொடுப்பது மக்களை மேலும் நெருக்கடிக்குள் உள்ளாக்குவதாகும் எனவே இதனை நிறுத்துமாறு கரைச்சி பிரதேச சபையின் சமத்துவக் கட்சியின் உறுப்பினர் இ. இளங்கோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது கரைச்சி பிரதேச சபையில் அதிகரித்த ஆதன வரி தொடர்பில் நாம் தொடர்ந்தும் எமது ஆட்சேபனையையும், எதிர்ப்பையும் தெரிவித்து வருகின்றோம்.

கரைச்சி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மக்களில் ஒரு குறிப்பிட்ட சொற்ப சதவீத மக்களை தவிர பெரும்பாலானவர்கள் பொருளாதாரத்தில் மேம்பாடுடையவர்களாக இல்லை எனவே மக்கள் அவ்வாறான நிலையில் இருக்கும் போது அந்த மக்களிடம் ஆதனவரியை செலுத்துமாறு நிர்ப்பந்தம் செய்வதும் இக்கால சூழலில் மிகவும் பொருத்தமற்ற செயற்பாடு.

மூன்று வேளை உணவுக்கே தினமும் போராடுகின்ற நிலையில் மக்கள் உள்ள போது அவர்களை நாமும் நெருக்கடிக்குள் தள்ளவிடக் கூடாது எனத் தெரிவித்த அவர் நாட்டில் தற்போது அனைத்து வரிகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

புதிய புதிய வரிகள் மக்கள் மீது சுமத்தப்பட்டுவருகிறது இந்த நிலையில் கரைச்சி பிரதேச சபையும் தனது அதிகரித்த ஆதனவரியை செலுத்துமாறு மக்களை நிர்ப்பந்தம் செய்வதனை நிறுத்த வேண்டும் எனவும் அவர் கூறினார். (ஐ)

# தினமும் 400 ஐஸ் போதை அடிமைகளுக்கு மறியல்



கொழும்பு, நவ. 21

ஐஸ் போதைக்கு அடிமையான சுமார் 400 பேர் தினமும் விளக்கமறியலில் வைக்கப்படுகின்றனர் என்று நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளின் எண்ணிக்கை தற்போது 26 ஆயிரத்தை தாண்டியுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

சிறைச்சாலை நெரிசலைக் குறைக்க அவசர நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியது அவசியமானது எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்துமாறு கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், நவ. 21

போதைப்பொருள் பாவனை தொடர்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் முகமாக மானிப்பாயில் நேற்று கவனவீர்ப்பு போராட்டம் நடைபெற்றது.

மானிப்பாய் அந்தோனியார் தேவாலயம் அருகே இந்தக் கவனவீர்ப்பு போராட்டம் நடைபெற்றது.

இதன்போது, போதைப் பொருள் கடத்தல், விற்பனையை ஒழிக்குமாறும் மாணவர்கள் மத்தியில் போதைப் பொருள் பவானையில் ஒழிக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டது. (ஐ)

# தோல்வியை கண்டு அஞ்சியே தேர்தலை பிற்போடுகிறது அரசு

## ஜீ. எல். பீரிஸ் காட்டம்



கொழும்பு, நவ. 21

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடும் அரசாங்கத்தின் முயற்சி வெற்றி பெற்றால், அரசாங்கம் பொதுத் தேர்தலையும் பிற்போட அவதானம் செலுத்தும். இந்த அரசாங்கத்துக்கு மக்களாணை கிடையாது. படுதோல்வி அடைவதை முன்கூட்டியதாக அறிந்தே அரசாங்கம் தேர்தலுக்கு செல்ல அச்சமடைகிறது. தேர்தலை பிற்போடும் முயற்சியை சட்டத்தின் ஊடாக தோற்கடிப்போம் பாராளுமன்ற உறுப்பினர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடிக்கு அரசாங்கத்தால் மாத்திரம் தனித்து தீர்வு காண முடியாது. சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஜி. எஸ். பி. பிளஸ் வரிச்சலுகை உட்பட சர்வதேசத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வது அத்தியாவசியமானது.

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருடன் கடந்த வாரம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டோம். உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. இருப்பினும், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு தமக்கு அதிகாரம் உள்ளதா என்பது தொடர்பில் சட்ட ஆலோசனை கோர சட்டமா அதிபருக்கு கடிதம் அனுப்பியுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டமை முற்றிலும் தவறானது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை தொடர்ந்து பிற்போட பல முயற்சிகளை அரசாங்கம் மேற்கொள்கிறது. பிரதமர் தினேஷ் குணவர்த்தன, எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தலைமையில் எல்லை நிர்ணய குழுவை நியமித்துள்ளார்.

எல்லை நிர்ணய குழுவை அமைக்கும் அதிகாரம் பிரதமருக்கு கிடையாது. எல்லை நிர்ணய மீளாய்வு குழுவை நியமிக்கும் அதிகாரம் பிரதமருக்கு உண்டு. எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தலைமையிலான எல்லை நிர்ணய குழுவுக்கு சட்ட அந்தஸ்து கிடையாது. எவ்வித அங்கீகாரமும் கிடையாது.

8000 உறுப்பினர்களை கொண்டுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் எண்ணிக்கையை 4000ஆக குறைக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கிறோம்.

ஜனாதிபதி ரணில் பிரதமராக பதவி வகித்த போது அவர் தான் உள்ளூராட்சி மன்றங்களின் எண்ணிக்கையை அதிகரித்தார். கடந்த நான்கு வருட காலத்துக்கு பின்னர் உள்ளூராட்சி மன்றங்களின் எண்ணிக்கையை குறைக்க அவதானம் செலுத்தியுள்ளமை சந்தேகத்துக்குரியது.

தேர்தல் முறைமை ஊடாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போட ஒருபோதும் இடமளிக்க முடியாது. இந்த தன்மையே மாகாண சபை தேர்தலுக்கும் நேர்ந்தது.

மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் மாகாண சபைகள் இயங்குகின்றன. அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தில் மாகாண சபைகள் தேர்தல்கள் முறைமை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இதனை கருத்திற்கொள்ளாமல் மாகாண சபைகள் கால வரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளது. இதனால், அரசமைப்பின் விதிவிதானங்கள் மறுக்கப்பட்டுள்ளன. மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டுள்ளது.

இந்த அரசாங்கத்துக்கு மக்களாணை கிடையாது. படுதோல்வி அடைவதை முன்கூட்டியதாக அறிந்தே அரசாங்கம் தேர்தலுக்கு செல்ல அச்சமடைகிறது. தேர்தலை பிற்போடும் அரசாங்கத்தின் முயற்சியை சட்டத்தின் ஊடாக தோற்கடிப்போம் - என்று நேற்று முன்தினம் பாராளுமன்றில் உரையாற்றியபோது கூறினார். (ஐ)

# இலங்கை கடற்படையினர் தாக்கியதில்

# கண் பார்வை இழந்ததாக தமிழக மீனவர் புகார்!

**ராமேஸ்வரம் மீன் பிடி துறைமுகத்தில் இருந்து மீன்பிடிக்க சென்ற மீனவர்கள் கச்சத்தீவுக்கும் தனுஷ்கோடிக்கு அருகே உள்ள பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருக்கும் போது அங்கு வந்த இலங்கை கடற்படையினர் மீனவர்களை எச்சரித்து அனுப்பியுள்ளனர். இந்நிலையில் இலங்கை கடற்படை எச்சரித்து சென்ற படகில் இருந்த தங்கச்சி மடத்தை சேர்ந்த ஜான்சன் என்பவர் படகில் கீழே விழுந்ததில் வலது கண்ணில் காயம் ஏற்பட்டது.**

**பிரபுராவ் ஆனந்தன்**

ராமேஸ்வரம் மீன் பிடி துறைமுகத்தில் இருந்து மீன் பிடிக்க சென்றபோது நடுக்கடலில் இலங்கை கடற்படையினர் படகில் ஏறி நடத்திய தாக்குதலில் வலது கண் நரம்பு பாதிக்கப்பட்டு தாம் முற்றிலும் கண் பார்வையை இழந்துள்ளதாக கூறுகிறார் தமிழகத்தின் தங்கச்சிமடம் மீனவர் ஒருவர்.

கண்பார்வை இன்றி தவிக்கும் தமக்கு அரசு உதவி செய்ய வேண்டும் என அந்த மீனவர் குடும்பத்துடன் கோரிக்கை வைத்துள்ளனர்.

ராமேஸ்வரம் மீன் பிடித்து துறைமுகத்தில் இருந்து கடந்த வாரம் திங்கட்கிழமை காலை சுமார் 400க்கும் மேற்பட்ட விசைப்படகில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன் பிடிக்க கடலுக்கு சென்றனர்.

**நடுக்கடலில் தாக்குதல்**

கச்சத்தீவுக்கு தனுஷ்கோடிக்கும் இடையே மீனவர்கள் மீன் பிடித்து கொண்டிருக்கும் போது அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த இலங்கை கடற்படையினர் இலங்கை கடற்பரப்பிற்குள் அத்து மீறி நுழைய கூடாது என ஒலிபெருக்கி மூலம் எச்சரித்தார். இதனால் அப்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த ராமேஸ்வரம் மீனவர்கள் நாளா புறமும் சிதறி ஓடினர்.

அப்போது அந்தோணியார் அடிமை என்பவருக்கு சொந்தமான விசைப்படகில் ஏறிய இலங்கை கடற்படை வீரர்கள் படகில் இருந்த எட்டு மீனவர்களையும் சரமாரியாக தாக்கி படகில் இருந்த மீன் பிடி சாதனங்கள் உள்ளிட்டவைகளை உடைத்து சேதப்படுத்தி படகோட்டி ஜான்சன் மீது தாக்குதல் நடத்தியதில் அவரது வலது கண்ணில் பலத்த காயம் ஏற்பட்டதாக மீனவர் ஜான்சன் தெரிவிக்கிறார்.

பின்னர் செவ்வாய்க்கிழமை காலை கரை திரும்பிய மீனவர் ஜான்சன் விசாரணைக்கு அஞ்சி மீன் வளத்துறை மற்றும் காவல்துறையினரிடம் தகவல் தெரிவிக்காமல் வீட்டிற்கு சென்று விட்டார்.

இந்நிலையில் மறுநாள் காலை ஜான்சனுக்கு கண் வலி அதிகமானதால் சிகிச்சைக்காக மதுரை சென்று கண் மருத்துவமனையில் ஸ்கேன் செய்து பார்த்த போது ஜான்சன் வலது கண்ணில் உள்ள முக்கிய நரம்பு இலங்கை கடற்படை வீரர்கள் தாக்கியதில் சிதைந்துள்ளதாகவும், இனிமேல் அந்த கண்ணில் அறுவை சிகிச்சை செய்தாலும் கண் பார்வை திரும்ப பெற வாய்ப்பு இல்லை என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

**மீனவருக்கு கண் பார்வை பாதிக்க காரணம்**

இதனால் மனமுடைந்த மீனவர் ஜான்சன் வீட்டிற்கு திரும்பினார். இலங்கை கடற்படை தாக்குதலில் முழுமையாக கண்பார்வை இழந்த மீனவர் ஜான்சனுக்கு தமிழக அரசு உதவ வேண்டும் என கண்பார்வையை இழந்த மீனவர் தனது குடும்பத்துடன் அரசுக்கு கோரிக்கை வைத்துள்ளார்.

இலங்கை கடற்படையின் தொடர் தாக்குதல் மற்றும் கைது நடவடிக்கை காரணமாக தங்கச்சிமடம், பாம்பன், ராமேஸ்வரம் பகுதி மீனவர்கள், மீன்பிடி தொழிலை விட்டு மாற்று தொழில் தேடி அண்டை மாநிலங்களுக்கு செல்லவதால் ராமேஸ்வரத்தில் மீன் பிடி தொழில் அழியும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே மத்திய, மாநில அரசுகள் இலங்கை அரசுடன் பேசி நடுக்கடலில் மீன் பிடிக்கும் மீனவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளனர்.

மீன்பிடிக்க கடலுக்கு சென்ற மீனவர் இலங்கை கடற்படை தாக்கியதில் மீனவர்கள் முழுமையாக கண் பார்வை இழந்ததுள்ள சம்பவம் மீனவ கிராமங்களில்

## படகில் தவறுதலாக விழுந்ததால் காயம் என்கிறார் ராமநாதபுரம் ஆட்சியர்!!

சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

**கண் பார்வை இன்றி வாழ்வாதாரத்திற்கு என்ன செய்வேன்?**

இது குறித்து பாதிக்கப்பட்ட மீனவர் ஜான்சன் பேசுகையில், ‘கடந்த வாரம் திங்கட்கிழமை காலை மீன்பிடி அனுமதி சீட்டு பெற்று மீன் பிடிக்க கடலுக்குள் சென்றோம். இரவு 10 மணி அளவில் நடுக்கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது இலங்கை கடற்படைக்கு சொந்தமான ரோந்து கப்பல் ஒன்று படகின் மீது மோதியது. பின்னர் அந்த ரோந்து படகில் இருந்த இலங்கை கடற்படை வீரர்கள் படகில் இருந்த மீன்களை அள்ளிக்கொண்டு படகில் இருந்த எட்டு மீனவர்களையும் கயிறு மற்றும் கம்பால் சரமாரியாக தாக்கினர்.

படகின் ஓட்டுநர் நான் என்பதால் என்னை கடுமையாக தாக்கினர். இதில் எனது வலது கண்ணில் காயம் ஏற்பட்டது. வீட்டுக்கு வந்த பின்னர் கண் வலி அதிகமானதால் புதன்கிழமை காலை மதுரையில் உள்ள தனியார் கண் மருத்துவமனைக்கு சென்று பரிசோதனை செய்தபோது கண் பார்வைக்கு வரும் முக்கிய நரம்பு பகுதி சிதைந்துள்ளது ஒரு வார காலம் மருந்து சாப்பிட்டு பார்த்து ஒரு அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என தெரிவித்தனர்.

ஒரு வாரம் கழித்து அறுவை சிகிச்சை செய்யும் போது பார்வை கிடைக்கவில்லை என்றால் முழுமையாக கண் பார்வை இழக்க நேரிடும் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

கண் பார்வையை இழந்தால் எப்படி என்னுடைய மூன்று குழந்தைகளையும் என் மனைவியை காப்பாற்ற முடியும். மத்திய , மாநில அரசுகள் இலங்கை கடற்படை மீது தக்க நடவடிக்கை எடுத்து தன்னுடைய வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு மருத்துவ செலவுக்கு நிதி உதவி அளிக்க வேண்டும் என மீனவர் ஜான்சன் கோரிக்கை வைத்தார்.

**இலங்கை கடற்படையால் விதவைகளான மீனவப் பெண்கள்**

இது குறித்து ஜான்சன் மனைவி மேரி பேசுகையில், மீன்பிடி தொழிலுக்காக சென்ற என் கணவரை இலங்கை கடற்படை தாக்கி தற்போது கண் பார்வை முற்றிலும் இழந்துள்ளார். கண்பார்வையற்ற கணவரை வைத்து எப்படி எங்கள் குடும்பத்தை நடத்த முடியும்.

இதே போல் எங்கள் மீனவ கிராமமான தங்கச்சி மடத்தில் வாழும் பல பெண்கள் இலங்கை கடற்படையினரால் கணவரை இழந்து விதவைகளாகவும், ஊனமுற்ற கணவர்களுடன் வாழ்ந்து வருகின்றனர்.

இலங்கை கடற்படையின் தொடர் தாக்குதலுக்கு பயந்து மீன்பிடி தொழிலை விட்டு மாற்று தொழில் தேடி அண்டை மாநிலங்களுக்கு சென்று விட்டனர். இதனால் பாரம்பரிய தொழிலான மீன்பிடி தொழிலை அழியும் நிலையில் உள்ளது.

## என்ன நடந்தது?

இலங்கை கடற்படையின் தொடர் தாக்கு தலால் இங்குள்ள மீனவ பெண்கள் அதிகம் பாதிக்கப்பட்டு வருவதாக மேரி தெரிவித்தார்.

இது குறித்த பேசிய ஜான்சன் தாய் மடிய ராணி, கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு இதேபோல் ராமேஸ்வரத்தில் இருந்து மீன்பிடிக்கச் சென்று எனது இளைய மகன் இதுவரை கரை திரும்பாமல் கடலில் காணாமல் போய் விட்டான்.

இந்நிலையில் எனது குடும்பத்தை கவனித்து வந்த வந்து எனது மூத்த மகனும் கடலுக்கு மீன் பிடிக்கப் போகும் போது இலங்கை கடற்படை தாக்கியதில் கண் பார்வை இழந்துவிட்டார்.

இதனால் தங்களது வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. எனக்கு கணவர் இல்லை எனது மகனை நம்பி தான் நானும் அவரது குடும்பம் வாழ்ந்து வந்த நிலையில் கண் பார்வை பாதிக்கப்பட்டது மிகுந்த வேதனை அளிக்கிறது.

அரசு உடனடியாக மீனவர்கள் பிரச்னைக்கு தீர்வு காண வேண்டும். எனது மகனுக்கு உதவி செய்ய வேண்டும் என தாயார் மடிய ராணி கேட்டுக்கொண்டார்.



**படகில் தவறி விழுந்ததால் கண்ணில் ஏற்பட்ட காயம்**

இலங்கை கடற்படை தாக்கியதால் மீனவர் கண் பார்வை இழந்ததாக மீனவர் கூறுவது குறித்து ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் ஜானி டாம் வர்கீஸ்யிடம் கேட்ட போது பேசிய அவர், ராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து மீன்பிடிக்க சென்ற மீனவர்கள் கச்சத்தீவுக்கும் தனுஷ்கோடிக்கு அருகே உள்ள பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருக்கும் போது அங்கு வந்த இலங்கை கடற்படையினர் மீனவர்களை எச்சரித்து அனுப்பியுள்ளனர்.

இந்நிலையில் இலங்கை கடற்படை எச்சரித்து சென்ற படகில் இருந்த தங்கச்சிமடத்தை சேர்ந்த ஜான்சன் என்பவர் படகில் கீழே விழுந்ததில் வலது கண்ணில் காயம் ஏற்பட்டது.

காயம் ஏற்பட்டதன் காரணமாக ராமேஸ்வரத்தில் முதல் உதவி அளிக்கப்பட்டு பின்னர் உயர் சிகிச்சைக்காக மதுரை தனியார் கண் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

மீனவருக்கு உயர் ரத்த அழுத்தம் இருப்பதால் ஒரு வார காலம் முடிந்து அறுவை சிகிச்சை செய்வதாக மருத்துவர்கள் தெரிவித்ததாக் மீனவர் குடும்பத்திடம் இருந்து தகவல் பெறப்பட்டது.

ராமேஸ்வரம் மீன்வளத்துறை மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குனர் மற்றும் அலுவலர்கள் மீனவரின் வீட்டிற்கு நேரில் சென்று மீனவருக்கு அளிக்கப்படும் சிகிச்சை குறித்து விவரம் சேகரிக்கப்பட்டு அறுவை சிகிச்சை முடிந்த பின்னர் மருத்துவரின் அறிக்கை பெற்று நிவாரணம் வழங்கிட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என குடும்பத்தினர் தெரிவிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் ஜானி டாம் வர்கீஸ் தெரிவித்துள்ளார்.

**தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தவில்லை - இலங்கை கடற்படை**

தமிழக மீனவர்கள் மீது தாம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தாக்குதல் நடத்தவில்லை என இலங்கை கடற்படை ஊடகப் பேச்சாளர் கெப்டன் இந்திக்க டி சில்வா தெரிவிக்கின்றார்.

இலங்கை கடற்படை அதிகாரிகளின் தாக்குதலினால் தமிழக மீனவர் ஒருவரின் பார்வை இல்லாது போனதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் இலங்கை கடற்படை ஊடகப் பேச்சாளர் கேப்டன் இந்திக்க டி சில்வாவிடம் வினவிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி பிரவேசித்த குற்றச்சாட்டின் கீழ், குறித்த தினத்தில் 14 இந்திய மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்ததாக அவர் கூறினார்.

யாழ்ப்பாணம், வெற்றிலைகேணி, பகுதியில் வைத்தே இந்த மீனவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் அவர் குறிப்பிடுகின்றார். அதேவேளை, இலங்கைக் கடற்பரப் பிற்குள் அத்துமீறி பிரவேசித்து, மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும் இந்திய மீனவர்களை தமது விரைவு படகுகளை பயன்படுத்தி, தமது கடற்பரப்பிலிருந்து வெளியேற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் தெரிவிக்கின்றார்.

எனினும், இந்திய மீனவர்கள் மீது தாம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தாக்குதல் நடத்தவில்லை என கூறிய அவர், தாக்குதல் நடத்துவதற்கான தேவை தமக்கு கிடையாது எனவும் குறிப்பிட்டார்.

வெளிநாட்டு மீனவர்கள் இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி பிரவேசித்து, கடல் வளங்களை அழிப்பதுடன், தமது நாட்டு மீனவர்களின் தொழிலுக்கும் பாதிப்பை ஏற்படுத்தி வருவதாக இலங்கை கடற்படை தெரிவிக்கின்றது.

இதனால், தமது நாட்டு வளங்களை பாதுகாக்கும் நோக்கிலும், தமது நாட்டு மீனவர்களின் தொழிலை பாதுகாக்கும் நோக்கிலும் தமது கடற்பரப்பிற்குள் வருகைத் தரும் மீனவர்களை விரட்டுதல் மற்றும் கைதுசெய்யும் வகையிலான நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என இலங்கை கடற்படை மேலும் கூறியுள்ளது.

# இலங்கையின் பொருளாதார நோயை சமாளிக்கும் ரணில் அரசபொருளியல்



அ. வரதராஜா பெருமாள்

பகுதி 6

# வங்கி வட்டி வீதங்கள் அதிகரித்தன விலை வீழ்ச்சி ஏற்படவில்லை!

*19.* கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து நிலையான வைப்புகளுக்கு வழங்கப்படும் வட்டி வீதங்களையும், வழங்கும் கடன்களுக்கு அறவிடும் வட்டி வீதங்களையும் வங்கிகள் போட்டி போட்டுக் கொண்டு அதிகரித்துள்ளன. அதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் மத்திய வங்கியினூடாக ஊக்குவித்துள்ளது. மத்திய வங்கி வர்த்தக வங்கிகளுக்குக் கொடுக்கும் கடனுக்கு வழங்கும் வட்டி வீதத்தை 15 தசம் (புள்ளி) .5 சதவீதமாக்கி, வரத்தக வங்கிகள் மத்திய வங்கியில் வைக்கும் வைப்புக்கு வட்டியாக 14 தசம் .5 சதவீதமுமென ஆக்கியுள்ளது. அதேவேளை, அரச வர்த்தக வங்கிகள் வெளியார் மேற் கொள்ளும் நிலையான வைப்புகளுக்கு வழங்கும் வட்டி வீதத்தை 16 சதவீதம் தொடக்கம் 24 சதவீதம் வரை அறிவித்துள்ளன. தனியார் வங்கிகளோ போட்டி போட்டுக் கொண்டு 22 தொடக்கம் 26 சதவீதம் வரை நிலையான வைப்புகளுக்கு வட்டி வீதங்களை அறிவித்துள்ளன. இதேபோலவே, 6 மாதங்களுக்கு மேலாக முதிர்ச்சி பெறும் வகையான திறைசேரி உறுதிப் பத்திரங்கள் மற்றும் பிணைமுறிகளின் அடிப்படையில் அரசு பெறும் கடன்களுக்கான வட்டிவீதங்களும் 16 சதவீதங்களுக்கு மேலாக அதிகரிக்கப்பட்டுள்ளன. இந்த வட்டி வீதங்களெல்லாம், கடந்த மார்ச் மாதத்துக்கு முந்திய நிலைமைகளோடு ஒப்பிடுகிற போது இரண்டு மடங்குக்கும் அதிகமாகும். இதேவேளை, வங்கிகளிலிருந்து பொதுவாக மக்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் பெறும் கடனுக்கான வட்டிவீதங்கள் அரச வங்கிகளிற் கூட 25 சதவீதங் களுக்கு மேலேயே உள்ளன.

இவ்வாறாக வட்டி வீதங்களை அதிகரித்தது பணவீக்கத்தை அதாவது பொருட்களின் விலைகளில் ஏற்பட்டுள்ள அசாதாரண அதிகரிப்பைக் குறைப்பதற்கே என அரச நிதி அமைப்புகள் கூறுகின்றன. இதன் மூலம் நாட்டில் சுழற்சியில் இருக்கும் பணத்தில் கணிசமான பகுதி வங்கிகளை நோக்கி இழுக்கப்படும் எனவும், அதன் மூலம் மக்களினால் வங்கியில் சேமிப்பாக வைக்கப்படும் பணம் அதிகரிக்கப்படும் எனவும், அதன் மூலம் பொருட்களை வாங்குவது (கேள்வி) குறையும் எனவும், அதன் மூலம் சந்தையில் விலைகள் வீழ்ச்சியடையுமெனவும், அதன் மூலம் மிக உயர்ந்த நிலையில் இருக்கும் பணவீக்கம் குறையும் எனவும் அரசு சார் பொருளாதார நிர்வாகிகளால் விளக்கம் அளிக்கப்படுகிறது.

இது தொடர்பாக எழும் ஏனைய கேள்விகள் ஒரு புறமிருக்க, மேலே குறிப்பிட்டவாறு வட்டி வீதங்கள் அதிகரிக்கப்பட்டு 6 மாதங்கள் கடந்து விட்டன. ஆனால் பொருட்களின் விலைகள் சந்தைக் காரணியால் இன்னமும் குறையவில்லை என்பது வெளிப்படை. சில முக்கியமான உணவுப் பொருட்களின், குறிப்பாக அரிசி, சீனி, மசூர் பருப்பு, வெள்ளை மாவு போன்றனவற்றினதும் பெற்றோலியப் பொருட்களினதும் விலைகளை சற்றுக் குறைப்பதற்காக அரசாங்கம் திட்டமிட்ட ரீதியில் அவற்றின் இறக்குமதிகளை குறிப்பிட்டளவு அதிகரித்திருக்கின்றது. அதன்மூலம் அவற்றின் விலைகள் சற்றுக் குறைய வழி வகுத்துள்ளது. ஆனால், ஒட்டு மொத்தமாகப் பார்த்தால், உணவுப் பொருட்கள் உட்பட எந்தவொரு பொருளினது விலையும் குறைந்ததாக இல்லை. இன்னும் சொல்லப் போனால் பெரும்பாலான பொருட்களின் விலைகள் குறையாதது மட்டுமல்ல, நாளாந்தம் சிறிது சிறிதாக உயர்ந்தே செல்கின்றன என்பதை மத்திய வங்கி வெளியிடுகின்ற அன்றாட சந்தை விலை நிலவர அறிக்கைகளும், சில்லறை வர்த்தகத்தில் ஈடுபடுகின்ற பெரும் நிறுவனங்கள் அவ்வப்போது வெளியிடும் விலைப் பட்டியல்களும், சில நாளேடுகள் அன்றாடம் வெளியிடும் சந்தைகளில் நிலவும் விலை விபரப் பட்டியல்களும் தெளிவாகக் காட்டுகின்றன.

### பாலுக்குக் காவலாக பூனைகள் மகா நிபுண மாதன முத்தர்கள்

*20.* வங்கிகளின் வட்டி வீதங்களை அதிகரித்ததன் நோக்கம் சந்தையில் சுழன்று கொண்டிருக்கும் பண அளவைக் குறைப்பதுதான் என்றால், நாட்டின் மொத்த உற்பத்திகள் - வழங்கல்கள் வீழ்ச்சியடைந்திருக்கிற இன்றைய சூழலில், மத்திய வங்கியைக் கொண்டு பணத்தை அச்சிட்டு, அரசாங்கம் அவற்றை தனது செலவுகளினூடாக சந்தைக்குள் சுழல விடக் கூடாது. ஆனால் இந்த அரசாங்கம் இந்த ஆண்டு ஏப்ரல் தொடங்கி அக்டோபர் வரை யான காலப்பகுதியில் மட்டும் அறுபத் தொன்பதாயிரத்து நூறு கோடி ரூபாய்களை அச்சடித்து வெளியிட் டுள்ளது (31, ஒக்டோபர் 2022 - DAILY FT). இந்த ஆண்டில் ஏற்பட்ட அசாதாரண விலைகள் உயர்வுக்கு, அந்நியச் செலாவணி பற்றாக்குறையால் இறக்குமதிகள் குறைக்கப்பட்டதுவும், நாட்டில் உற்பத்திகளில் ஏற்பட்ட வீழ்ச்சியும் மட்டுமல்ல, பணத்தை கண்மூடித் தனமாக அச்சிட்டு வெளி யிட்டதுவும் ஒரு பிரதான காரண மென்பதை அனுபவம் மிக்க பொரு ளாதார நிபுணர்கள் தெளிவாகவே மீண்டும் மீண்டும் கூறியிருக்கிறார்கள்.

பணத்தை பெருந் தொகையில் அச்சடித்து அவற்றை சந்தையில் சுழல விடுவது மட்டுமல்ல, அதேவேளை மறைமுக வரிகளையும் அரசாங்கம் உயர்த்தியுள்ளது. வற் வரி (ஏயுவு) யை 8 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாக்கி பின்னர் அதனை 18 சதவீதமாக்கியிருக் கின்றது. சமூக பாதுகாப்பு வரி என 2.5 (இரண்டரை) சதவீதமாக இன்னுமொரு மறைமுக வரியையும் விதித் துள்ளது. மறைமுக வரிகள் நிச்சயமாக ஒன்றுடன் ஒன்று தொடர்பான பண்டங்களின் விலைகளை அதிகரிக்கும். அது இறுதியில் நுகர்வோர் மற்றும் ஏனைய வகைகளில் கொள்வனவு செய்யும் பண்டங்களின் விலைகளை உயர்த்தும் என்பது அடிப்படைப் பொருளியல் அறிவு உள்ள அனைவருக்கும் தெரிந்த விடயமே. மறைமுக வரிகள் என்பது உற்பத்தியாளர்கள் மற்றும் வர்த்தகர்களிடமிருந்தே அரசு அறவிடுகிறதென்றாலும், உற்பத்தியாளர்களும் வர்த்தகர்களும்



பொருட்களினதும் சேவைகளினதும் விலைகளை உயர்த்தி அந்த வரிகளையும் நுகர்வோர் - வாங்குவோர் மீதே சுமத்தி விடுகிறார்கள். எனவே இந்த மறைமுக வரிகளும் பண்டங்களினது விலைகளை மேலும் உயர்த்தி விடுகின்றன. அந்த வகையில் அரசாங்கம் ஒரு பக்கம் பண்டங்களினது விலைகளைக் குறைக்க நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லிக் கொண்டு, மறுபுறமாக, பண்டங்களின் விலைகளை அதிகரிக்கும் வேலைகளையும் தானே செய்கின்றது.

### மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதிக்கும் கதை

*21.* மக்களின் கொள்வனவு சக்தியை அரசாங்கம் திட்டம் போட்டு சட்டம் போட்டு குறைக்க வேண்டிய அவசியமில்லை. பொருட்களின் தட்டுப்பாடுகளும் விலையேற்றங்களும் மக்களின் வாங்கும் சக்தியை ஏற்கனவே குறைத்து விட்டது. 2019ல் மாதம் 60 ஆயிரம் ரூபா மாத வருமானம் பெற்ற ஒரு நபருக்கு கடந்த மூன்று ஆண்டுகளில் மொத்தமாக 10 சதவீதம் தொடக்கம் அதிக பட்சம் 15 சதவீத அளவுக்கு மட்டுமே சம்பள அதிகரிப்பு நடந்திருக்கிறது.

அந்தளவுக்கு அதிகரிப்பு அனைத்து உழைப்பாளர்களுக்கும் கிடைத்திருக்கிறதா என்றால் இல்லை என்பதே பதிலாகும். அது ஒருபுறமிருக்க, 15 சதவீத உயர்வு என்று பார்த்தாலும் கூட, முன்னர் 60 ஆயிரம் சம்பளமாக பெற்றவர் இப்போது 69 ஆயிரம் ரூபா மட்டுமே பெறுகிறார். ஆனால் 2019ம் ஆண்டு சுமார் 30 ஆயிரம் ரூபாவுக்கு வாங்கிய அளவுக்கு பொருட்களை இப்போது 69000 ரூபாவுக்கு வாங்க முடியாது.


2019ல் வாங்கிய பொருட்களின் அளவோடு ஒப்பிட்டால் இன்று அதேயளவு பணத்தைக் கொண்டு கிட்டத்தட்ட 60 சதவீதம் குறைவான அளவு பொருட்களை மட்டுமே வாங்க முடிகின்றது. அத்தியாவசிய பொருட்கள் அனைத்தினதும் விலைகள் பெரும்பாலும் இரண்டரை மடங்குக்கு மேலாகவே அதிகரித்துள்ளன. அனைத்து பொருட்களினதும் விலைகளில் சராசரியாக ஏற்பட்டுள்ள அதிகரிப்பு இரண்டரை மடங்கெனக் கொண்டால், அதன் மறுபக்க உண்மை யானது, வருமானத்தின் மெய்யான பெறுமதி அறுபது சதவீதத்தால் வீழ்ச்சி அடைந்து விட்டது என்பதே. அதாவது முன்னர் 100 பொருட்களை வாங்கிய அதே பணத்துக்கு இப்போது 40 பொருட்களை மட்டுமே வாங்க முடிகிறது என்பதே அர்த்தமாகும். வாழ்க்கைச் செலவு அதிகரிப்பின் படி ஊழியர்களின் - தொழிலாளர்களின் சம்பளம் உயர்த்தப்பட்டிருக்குமாக இருந்தால், அதாவது சென்ற வருடம் 60 ஆயிரம் ரூபா சம்பளம் பெற்ற ஓர் ஊழியருக்கு இந்த ஆண்டு குறைந்த பட்சம் ஒன்றரை லட்சம் ரூபாவாவது சம்பளம் கிடைக்க வேண்டும். ஆனால், அதிகரித்திருக்க வேண்டிய சமபளத் தோடு ஒப்பிடுகையில் அதிகரித்திருக் கிற சம்பளம் வெறுமனே 10 சதவீதமாக மட்டுமே உள்ளது. அரச துறைகளில் மட்டுமல்ல அனைத்து தனியார் துறைகளிலும் இதுவே நிலைமை.


நாளாந்த வருமானம் பெறும் கூலித் தொழிலாளர்கள் பெரும்பாலும் நாட்கூலியாக 40 அல்லது 50 சதவீதம் அதிகமாக கூலி பெறுகிறார்கள் என்று சொல்லப்பட்டாலும், அவர்களிற் பெரும்பாலானோருக்கு வேலை கிடைப்பதனை மாத அளவில் அல்லது வருட அளவில் பார்த்தால் அது கிட்டத்தட்ட அரைவாசியாகி விட்டது. தனியார் உற்பத்தி மற்றும் வர்த்தக தொழில் நிறுவனங்களில் நிரந்தர ஊழியர்களாக வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு சிறிய அளவில் சம்பளம் அதிகரிக்கப்பட்டிருந்தாலும், அது அவர்களின் கொள்வனவு சக்தியினுடைய பெருமளவு வீழ்ச்சியை எந்த வகையிலும் குறிப்பிடத்தக்க அளவு தடுத்து விடவில்லை. எனவே மிகப் பெரும்பான்மையான சதவீத மக்களைப் பொறுத்த வரையில் அவர்கள் சேமிக்கின்ற அளவுக்கு அவர்களுக்கு வருமானம் இல்லை. மிக அடிப்படையான சீவனோபாய அளவிலேயே வருமானம் பெறுகின்ற மக்களிடமிருந்து பணத்தை வங்கிகளை நோக்கி வரப்பண்ணுவதற்கான திட்டமே வட்டி வீதங்களின் ஏற்றம் என்பதனை எந்த வகையிலும் சரியானதாக - பொருத்தமானதாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை. மாறாக, இது பரந்துபட்ட பொதுமக்களுக்கும், நாட்டின் தேசிய பொருளாதார நலன்களுக்கும் பாதகமானதாகவே அமையும். இது அரசுசார் பொருளாதார நிபுணர்களுக்கு புரியவில்லை என்று சொல்ல முடியாது. இதில் ஏதோ வேறு சில மர்மங்கள் உள்ளன.

(பகுதி 7ல் நிறைவுறும்)


# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

37.  சம பக்க வடிவமான அறுகோண வடிவம் காணப்படுகின்றது. இதனை அமைக்கப் பொருத்தமான கம்பித் துண்டுங்கள் எது?




1) 2) 3)


38.  காட்டப்பட்டுள்ள திசையில் இருந்து பார்க்கும்போது தோன்றும் விதம் யாது?




1) 2) 3)

39. 3  4  3 = 15 இங்கு  ஆகிய குறியீட்டைக் காட்டும் சரியான கணித குறியீட்டினைக் காட்டும் விடை யாது?

1) x , + 2) + , x 3) x , -

40. 



1) 2) 3)

**01) பின்வரும் பந்தியை வாசியுங்கள்.**

காலிக்கோட்டையானது போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட மிகப் பழைமையான கோட்டையாகும். இது பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது. அதன் நுழைவாயில் வழியாக உள்ளே நுழைந்தோம். அங்கே புராதன ஆயுதங்கள், பல்வேறு கடைத்தொகுதிகள் என்பன காணப்பட்டன. அவற்றைப் பார்வையிட்டபடியே கோட்டையின் மேற்பகுதிக்கு வந்தோம். ஆகா! மதிலின் மேல் மோதும் கடலலையின் அழகே அழகுதான்! காலி நகரின் அழகு எம்மைப் பரவசப்படுத்தியது.

**பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

i) பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது எது? ..........

ii) "நவீன" என்பதன் எதிர்க்கருத்து யாது? ..........

iii) அஃறிணை, படர்க்கை, பன்மை வினைச்சொல் ஒன்று எழுதுக.

..........

iv) "எழில்" என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக. ..........

v) எம்மைப் பரவசப்படுத்தியது எது? ..........

vi) இடப்பெயர் ஒன்று எழுதுக. ..........

(6 புள்ளிகள்)

**02)** அஃறிணை நிகழ்கால பன்மை வினைச்சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழே கோடிடுக.

i) பறந்தன ii) குடிக்கின்றது iii) விழுகின்றன

(1 புள்ளி)

**03) தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.**

சிறப்புடன் / செய்தனர் / பொறுப்புக்களை / அனைவரும் / தமது / மிகவும்

..........

(1 புள்ளி)

**04) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.**

i) அம்மாவுடன் தம்பி சென்றது. ( )

ii) மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வார்கள். ( )

iii) புறாக்கூட்டம் பறந்தன. ( )

iv) ஒவ்வொரு பறவையும் அழகானவை. ( ) (4 புள்ளிகள்)

**05) பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.**

ஐயா நீங்கள் எங்கே போக வேண்டும் (1 புள்ளி)

## விடைகள்

**37. 1 38. 2 39. 1 40. 2**

**01.** 1) காலிக்கோட்டை 2) புராதன
3) காணப்பட்டன 4) அழகு
5) காலி நகரின் அழகு 6) காலிக் கோட்டை, காலி, கோட்டை

**02.** விழுகின்றன

**03.** அனைவரும் தமது பொறுப்புக்களை மிகவும் சிறப்புடன் செய்தனர்.

**04.** 1) × 2) ✓ 3) × 4) ×

**05.** ஐயா, நீங்கள் எங்கே போக வேண்டும்?

---

கல்வி tv CHANNEL-1

**21.11.2022**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |


கல்வி tv CHANNEL - 2

**21.11.2022**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# மாகாண சபைகள் தேர்தலை நடத்தி அதிகாரத்தை மக்களிடம் கொடுங்கள்

## கருணாகரம் எம். பி. வலியுறுத்து



கொழும்பு, நவ. 21

நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்னைக்கு ஆரம்பப் புள்ளியாகக் கொண்டுவரப்பட்ட மாகாண சபைத் தேர்தலை உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு முன்பு மாகாண சபைத் தேர்தலை நடத்தி அந்த மக்களின் கைகளில் அதிகாரத்தைக் கொடுக்கவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கோ. கருணாகரம் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும்,

69லட்சம் வாக்குகளை அள்ளிக் கொண்ட ஜனாதிபதியும் 3இல் இரண்டு பெரும்பான்மை பெற்ற சிறீ ங்கா பொதுஜன பெரமுனவும் தம்மை ஆதரித்த மக்களால் அடித்துத் துரத்தும் அளவுக்கும் தமது பதவிகளைத் தாமே இராஜினாமா செய்யும் அளவுக்கும் நாட்டின் நிலைமை சென்றது ஏன். ஜனாதிபதி தனது வரவு - செலவுத்திட்ட உரையில் நாங்கள் எங்கு தவறிழைத்தோம் என்ற ஒரு முக்கிய கேள்வியை எழுப்பியிருந்தார். சுதந்திரத்தின் பின்னர் 75 வருடங்கள் கடந்து செல்லப்படும் இந்த நேரத்தில் இது குறித்து எம்மால் திருப்திப்பட முடியுமா என்று வினவியதுடன் நாம் தவறிய இடம் எது எனவும் இந்த சபையில் வினா எழுப்பியிருந்தார்.

இந்தக் கேள்வியையே நான் கேட்கின்றேன். எங்கே தவறு நடந்து என்பது இன்னமும் உங்களுக்குத் தெரியாதா? எதனால் இந்த நிலை ஏற்பட்டது என்பதை இன்னமும் நீங்கள் புரிந்து கொள்ளவில்லையா? நாம் தவறிய இடம் எது என்பதை இன்னம் நீங்கள் உணரவில்லையா? ஒரு காலத்தில் இலங்கை நாடு என்றால் உலகம் தலை நிமிர்ந்து நின்று பார்த்த நிலைமை மாறி, இன்று கடன் செலுத்த முடியாத ஒரு நாடு, தனது வங்குரோத்து நிலையை தானே ஏற்றுக் கொண்டுள்ள ஒரு நாடு என்ற நிலைமைக்கு செல்வதற்கான காரணம் என்ன என்பதை நீங்கள் அறிந்தும் அறியாதவர்கள் போல் இருக்கின்றீர்களா?.

இந்த நாட்டின் பொருளாதார வளத்தை அபிவிருத்தி நோக்கித் தள்ளுவதற்குப் பதிலாக கடந்த மூன்று தசாப்தத்துக்கும் மேலாக யுத்தம் நோக்கித் தள்ளினீர்கள். இந்த யுத்தம் தந்த விளைவே இன்றைய பொருளாதாரப் பிரச்னை. இனப்பிரச்னையே முதற் காரணம். கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக எமது நாட்டின் வருமானத்தின் பெரும் பகுதியை பாதுகாப்புச் செலவீனம் விழுங்கிக் கொண்டது. அமெரிக்கா, இந்தியா, சீனா, ரஷ்யா போன்ற பிராந்திய வல்லரசுகளின் யுத்தப் பாதீட்டை விட எமது நாட்டின் யுத்தத்துக்கான பாதீடு வானளாவ உயர்ந்து நின்றது. யுத்த காலத்தில்தான் இந்த நிலை என்றால், யுத்தம் மௌனித்து 13 வருடங்களாகியும் யுத்தப் பாதீடு எமது நாட்டின் வருமானத்தின் பெருந் தொகையை விழுங்கிக் கொண்டிருக்கிறது. பாதுகாப்புக்காக இன்னமும் இந்தளவு பெருந் தொகையை ஒதுக்கித்தான் ஆகவேண்டுமா?

இந்த வரவு - செலவுத்திட்ட முன்மொழிவுகளில் ஜனாதிபதி இலங்கையின் வரலாற்றைக் கற்பதற்கு தனியான நிறுவனத்தைத் தாபிப்பது தொடர்பான முன்மொழிவை செய்துள்ளார். இதற்காக 50 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. உங்கள் பார்வையில் வரலாறு என்பது சிங்களமும் பௌத்தமும் தான். வரலாற்று மூலாதாரம் என்பது மகாவம்சம்தான். இந்த மகா வம்சம் மகாநாம தேரரின் கற்பனை என்பதை நீங்கள் இன்னமும் புரியாதது ஏன்? முதலில் புரிந்து கொள்ளுங்கள் பௌத்த மதம். சிங்களம் மொழி. பௌத்த மதத்திற்கும் சிங்கள மொழிக்கும் எந்த விதமான இணைப்பும் தொடர்பும் இல்லை.

பாற்பண்ணை உற்பத்தி தொடர்பாகக் கூறினீர்கள் கிழக்கில் பாற் பண்ணையாளர்களின் பண்ணை வளர்ப்புப் பிரதேசங்களான மயிலத்தமடு, மாதவணை, கந்தர்மல்லிச்சேனை போன்ற பிரதேசத்தை கிழக்கின் ஆளுநர் சிங்களக் குடியேற்றமாக மாற்ற முயற்சித்தார். எங்கள் கடும் எதிர்ப்பையும் பொருட்படுத்தவில்லை. இப்படியெனில் எப்படி பாலுற்பத்தி அதிகரிக்கும்?

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் முக்கியமானது அந்த நாட்டின் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தல். ஜனநாயகத்தை உறுதிப்படுத்தல் என்பது மக்கள் ஆணை ஊடாகவே ஆகும். இதற்காக மக்கள் தமது விருப்பத்தை வழங்குவதற்காக உரிய காலத்தில் தேர்தல்கள் நடத்தப்படவேண்டும். வெற்றி பெறுவோமோ தோல்வியடைவோமோ என்ற அச்சத்தில் ஜனநாயகப் பண்பை மிதித்து சீரழித்து விடக்கூடாது. எமது ஜனாதிபதியை நான் ஒரு ஜனநாயக கனவானாகவே இன்றும் மதிக்கின்றேன்.

அவரது அரசாங்கம் தோல்வியடைந்த போது தனது உத்தியோக பூர்வ மாளிகையிலிருந்து அடுத்த நிமிடம் தனது கையில் தனது ப்பிரீவ் கேசை சுமந்தபடி வெளியேறிய காட்சி எனக்கு ஞாபகத்துக்கு வருகிறது. ஆனால், எமது நாட்டில் இதுவரை கலைக்கப்பட்ட மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் இன்னும் நடத்தப்படவில்லை. எமது நாட்டின் இனப்பிரச்னைக்கான முற்றான தீர்வல்லாவிடினும் முதற் புள்ளியாக ஆரம்பிக்கப்பட்ட மாகாண சபை ஜனநாயக அடிப்படையில் இயங்க முடியாது ஆளுக்காள் சட்டக்காரணங்களைக்கூறி அவர் மீது இவர் குறை சுமத்தி மாகாண சபைத் தேர்தல் தள்ளிப் போடப்பட்டு வருகிறது.

எமது ஜனாதிபதி உண்மையிலேயே ஒரு ஜனநாயகக் கனவானாக இருந்தால் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களைவிட மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்தி மாகாண சபையினை மக்கள் நிர்வாகமாக மாற்றி அமைத்து ஆளுநரின் அதி மேலான அதிகாரத்திலிருந்து குறைந்தபட்சமேனும் விடுவிக்க வேண்டும். பழக்கதோசமோ கூடிய கூட்ட தோசமோ எமது ஜனாதிபதிய வர்கள் தனது ஜனநாயகக் கன வான் என்ற பெயரைக் காப்பாற்றுவாரா? - என்றார். (ஐ- 06)

## தொழுநோய் பரவல் மட்டக்களப்பில் உயர்வு

கொழும்பு, நவ. 21

நாட்டில் தொழுநோய் வேகமாகப் பரவி வருகிறது. இந்த ஆண்டில் 500இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதில், 126 பேர் மட்டக்களப்பு மாவட்டத்தை சேர்ந்தவர்களாவர்.

இதனிடையே பாடசாலை மாணவரிடையேயும் தொழுநோய் பரவும் அபாயம் அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொழுநோய் எதிர்ப்பு பிரசார அணியின் பணிப்பாளர் மருத்துவர் பிரசாத் ரணவீர தெரிவித்துள்ளார்.

தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களைக் கண்டறிய பாடசாலை மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட நாடு தழுவிய திட்டத்தைத் தொடர்ந்து தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமை தெரியவந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இந்த ஆண்டில் மட்டும் 500இற்கும் மேற்பட்ட தொழுநோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர். நோயாளிகளை கண்டறியும் நடவடிக்கை மேலும் விரிவுபடுத்தப்பட்ட தருணத்தில், கடந்த மூன்று மாதங்களில், 170 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவ்வாறு மாற்றப்பட்டவர்களில் பெரும்பாலானோர் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களை சேர்ந்தவர்களாவர்.

இதேவேளை, மட்டக்களப்பில் 126 நோயாளிகளும், கம்பஹாவில் 114 நோயாளிகளும், களுத்துறை மாவட்டத்தில் 82 நோயாளிகளும் இந்த ஆண்டில் மட்டும் பதிவாகியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வாழ்வாதார உதவியாக ஆடுகள் வழங்கப்பட்டன



திருக்கோவில், நவ. 21

திருக்கோவில் பிரதேச செயலகத்தினால் "கமசஹ்ஹ பிலிசந்தர" நிகழ்ச்சி திட்டத்தின் ஊடாக வாழ்வாதார உதவியாக ஆடுகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் திருக்கோவில் பிரதேச செயலக உதவிச்செயலாளர் கந்தவனம் சதிசேகரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு அவர் ஆடுகளை வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (ஐ)

## நீரிழிவு நோய் தொடர்பில் விழிப்புணர்வு நடவடிக்கை

மட்டக்களப்பு, நவ. 21

நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துவது தொடர்பான விழிப்புணர்வு நடைபவனி நேற்று முன்தினம் மாலை மட்டக்களப்பில் முன்னெடுக்கப்பட்டது

மட்டக்களப்பு மாவட்டத்தில் செயற்பட்டு வரும் லயன்ஸ் கழகங்களுடன் பாட சாலை லியோ கழகங்கள் இணைந்து மட்டக் களப்பு மாவட்டத்தில் நீரிழிவு நோயை கட் டுப்படுத்தும் வகையில் பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் விழிப்புணர்வு நடைபவனி மட்டக்களப்பு கல்லடி பாலத்தின் இருந்து பிரதான வீதி ஊடாக மட்டக்களப்பு நகர் காந்தி பூங்கா வரை இடம்பெற்றது.

ஆரம்ப நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சனி சிறிகாந்த் மாந கர முதல்வர் தியாகராஜா சரவண பவான் பிரதேச செயலாளர் வி.வாசுதேவன், மருத் துவ அதிகாரிகள் லயன்ஸ் கழக உறுப்பினர் கள் பொலிஸ் அதிகாரி பி.கே கெட்டி ஆராச்சி உட்பட பொலிஸ் அதிகாரிகள் இராணுவ அதிகாரிகள் மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது நீரிழிவு தொடர்பான விழிப்புணர்வு கையேடுகளும் வழங்கி வைக்கப்பட்டன. (ஐ)

## மட்டு - திருமலை வீதி அவலம் என்று மாறுமோ!



மட்டக்களப்பு, நவ. 21

மட்டக்களப்பு - திருகோணமலை பிரதான வீதியில் போக்குவரத்து செய்ய முடியாதவாறு குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது. தற்போது மழைக்காலம் வாகரை பிரதான வீதி வெள்ளம் நிறைந்து காணப்படுகிறது.

மட்டக்களப்பிலிருந்து கிழக்கு மாகாண தலைநகர் திருமலைக்கு மட்டக்களப்பிலிருந்து இலகுவாக செல்லும் ஒரே பாதை இதுவாகும். ஆனால், இந்தப் பாதை பயணிக்க முடியாதவாறு காணப்படுகின்றது.

இது விடயத்தில் அதிகாரிகள் உடன் தலையிட்டு இந்தப் பாதையை சீர் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த வீதியைப் பயன்படுத்தும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(ஐ)

# காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்படும் நாடுகளுக்கு நிதியுதவி வழங்க இணக்கம்!

## - வரலாற்று சிறப்புமிக்க ஒப்பந்தம் கைச்சாத்து -




கெய்ரோ, நவ. 21

காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்படும் ஏழை நாடுகளுக்கு நிதியுதவி வழங்குவது தொடர்பான வரலாற்றுச் சிறப்புமிக்க 'இழப்பு மற்றும் சேத' ஒப்பந்தம் ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்ற மாநாடு - 27 (சி. ஓ. இ. -27) உச்சி மாநாட்டில் நேற்று கைச்சாத்தானது.

எகிப்தின் ஷர்ம் எல்-ஷேக்கில் நடைபெற்றுவரும் காலநிலை உச்சிமாநாட்டில் இரவு முழுவதும் நடைபெற்ற பேச்சுக்குப் பின்னர், இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்த ஒப்பந்தம் காலநிலை மாற்றத்தால் மோசமாக பாதிக்கப்படும் நாடுகளுக்கு நிதியுதவி அளிப்பதை மையமாகக் கொண்டது. முன்னதாக, இந்த ஒப்பந்தம் தொடர்பாக பணக்கார நாடுகளிடம் அதிருப்தி தெரிவித்தன. இதனை உச்சிமாநாட்டின் தலைவர் ஒப்புக்கொண்டிருந்தார். ஆனால், சூழலைப் புரிந்து கொண்டு செயல்படும்படி அவர்களை அவர் வலியுறுத்தினார்.

உலக சராசரி வெப்பநிலையை தொழில்புரட்சிக்கு முந்தைய காலத்தின் வெப்பநிலையில் இருந்து 1.5 செல்சியஸுக்கு மிகாமல் கட்டுப்படுத்தும் இலக்கு இந்த மாநாட்டில் உறுதிசெய்யப்படுமா என்பது குறித்து கவலை நிலவுகிறது.

தொழில்புரட்சிக்கு முந்தைய காலத்தில் இருந்த வெப்பநிலையைவிட 1.5 செல்சியஸுக்கு மேல் வெப்பநிலை உயரும்போது, அது கோடி கணக்கான மக்களை காலநிலை பாதிப்பின் மோசமான நிலைக்குத் தள்ளும் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

காலநிலை மாற்றத்தை ஏற்படுத்துவதில் பணக்கார நாடுகள் முக்கிய பங்கு வகிப்பதால், பல நூற்றாண்டுகளுக்கு தாங்கள் நிதியுதவி வழங்க வேண்டியிருக்கும் என்று அஞ்சி கடந்த 30 ஆண்டுகளாக நிதியுதவி பற்றிய விவாதத்தை பணக்கார நாடுகள் எதிர்த்து வந்தன. ஆனால், சமீபத்திய ஆண்டுகளில் பாகிஸ்தான், நைஜீரியா மற்றும் உலகின் பிற பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளப்பாதிப்பு இந்த ஒப்பந்தம் கையெழுத்தாவதை தீர்மானிக்கும் விசயமாக மாறியது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஆப்கானிஸ்தானின் அகதிகள் துருக்கியிலிருந்து வெளியேற்றம்!



இஸ்தான்புல், நவ. 21

துருக்கி அரசாங்கம் தன் நாட் டின் எல்லைக்குள் இருந்து ஆயிரக்கணக்கான ஆப்கானிஸ்தான் அகதிகளை ஈரானுக்கு தொடர்ந்து அனுப்புகிறது. மேலும் ஆப்கானிஸ்தானுக்கு நேரடியாக விமானங்கள் மூலம் திருப்பி அனுப்பி வருகிறது என்று சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

துருக்கியில் உள்ள ஆப்கானிஸ்தான் அகதிகள் சர்வதேச பாதுகாப்புக்காக பதிவு செய்வதிலிருந்து தடுக்கப்படுவதாகவும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் கண்டறிந்துள்ளது.

நடப்பாண்டில் முதல் எட்டு மாதங்களில் இது வரை 44 ஆயிரத்து 768 ஆப்கானிஸ்தான் அகதிகளை துருக்கி விமானம் மூலம் அனுப்பியது.

தலிபான்கள் ஆப்கானிஸ்தானில் ஆட்சிக்கு வந்ததும் இந்த நடவடிக்கை வேகமெடுத்துள்ளது என்று மனித உரிமைகள் அமைப்பின் 73 பக்க அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

துருக்கியில் இருந்து சமீபத்தில் நாடு கடத் தப்பட்ட ஆப்கானியர்கள் சிலர், துருக்கிய பொலி ஸாரால் தாங்கள் தவறாக நடத்தப்பட்டனர் என்று குற்றம் சாட்டியுள்ளனர்.

எங்களை எந்த அளவுக்கு முடியுமோ அப் படி அடித்தார்கள், கொடூரமாக தாக்கினார்கள் என்று ஆப்கானியர்கள் கூறினர். நாங்கள் பிழைப்புக்காக துருக்கி சென்றோம். ஆனால், நாடு கடத்தப்படுவதை நாங்கள் விரும்பவில்லை என்று அவர்கள் கூறினர். (ஐ)

# ஈக்குவடோர் சிறைக்குள் குழு மோதலில் 10 பேர் பலி!

குவிட்டோ, நவ. 21

ஈக்குவடோர் நாட்டின் சிறைச் சாலைக்குள் 3 குழுக்களிடையே ஏற்பட்ட மோதலில் 10 பேர் உயிரிழந்தனர்.

தென்னமெரிக்க நாடுகளில் ஒன்றான ஈக்குவேடாரில் சமீப காலமாக சிறைச்சாலைகளில் வன்முறைகள் அதிகளவில் நடக்கின்றன.

இதையடுத்து, மோதலை தடுக்க அங்குள்ள 3 பிரதான குழுக்களை பிரித்து வேறு சிறைச்சாலைக்குள் மாற்றும் நடவடிக்கைகள் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது ஏற்பட்ட குழு மோதலில் 10 பேர் கொல்லப்பட்டனர். இதையடுத்து இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டு, கலவரம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. (ஐ)

# ஐ. நா. பாதுகாப்பு சபையில் இந்தியாவுக்கு நிரந்தர இடம்!

## பிரான்ஸ், இங்கிலாந்து ஆதரவு

நியூயோர்க், நவ. 21

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபையில் இந்தியாவும் நிரந்தர உறுப்பினர் நாடா வதற்கு நிரந்தர உறுப்பினர் நாடு களாக இருக்கும் பிரான்ஸ், இங்கிலாந்து நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையில் வீற்றோ அதிகார நாடுகளாக - நிரந்தர உறுப்பினர் நாடுகளாக அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா, சீனா ஆகியவை உள்ளன.

சர்வதேச பாதுகாப்பு, இராணுவம், வெளியுறவுக் கொள்கை போன்றவற்றை தீர்மானிக்கும் அமைப்பாக ஐ. நா. பாதுகாப்பு சபை உள்ளது.

இதில் நிரந்தர உறுப்பினராக இந்தியா முயன்று வருகிறது. இதற்கு உலக நாடுகளின் ஆதரவை திரட்டி வருகிறது. இந்நிலையிலேயே, இந்தியாவுக்கு பிரான்ஸ், இங்கிலாந்து நாடுகள் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளன.

# ட்ரம்பின் தடை நீக்கப்பட்டது!



நியூயோர்க், நவ. 21

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கு விதிக்கப்பட்ட தடையை டுவிற்றர் விலக்கியுள்ளதாக அதன் உரிமையாளர் எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.

டிரம்பின் டுவிற்றர் கணக்கு கடந்த 2020ஆம் ஆண்டு முடக்கப்பட்டது. வெறுப்புணர்வை தூண்டும் வகையில் கருத்துகளை பதிவு செய்தார் என்பதற்காக அவரின் கணக்கு முடக்கப்பட்டது.

டுவிற்றரை எலான் மஸ்க் வாங்கிய பின்னர் டிரம்ப் மீண்டும் அவரின் டுவிற்றர் கணக்கை பயன்படுத்த அனுமதி அளிக்கப்படுமா? என்பது குறித்த விவாதங்கள் அதிகரித்தன.

இந்நிலையில், டொனால்ட் ட்ரம்பை டுவிற்றரில் சேர்க்கலாமா இல்லையா என்பது தொடர்பில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில், பெரும்பாலானவர்கள் - 51.8 வீதத்தினர் ட்ரம்புக்கு ஆதரவாக வாக்களித்தனர். இதையடுத்து ட்ரம்புக்கான தடை நீக்கப்பட்டது. (ஐ)

# மகளை அறிமுகப்படுத்தினார் வடகொரியாவின் ஜனாதிபதி!



பியோங்யாங், நவ. 21

இன்றைய உலகின் இரும்புத் திரை நாடு என்று கூறப்படுவது வடகொரியா. அந்த நாட்டை 2011ஆம் ஆண்டு முதல் கிம் ஜோங் உன் ஆட்சி செய்கிறார்.

அந்த நாட்டைப் போலவே அவரின் குடும்பம் குறித்தும் வெளியுலகுக்கு தெரியாத நிலையே நீடித்து வருகிறது. கிம்முக்கு அடுத்தபடியாக அதிகாரமிக்க தலைவராக அவரின் சகோதரி கிம் யோ-ஜோங் அறியப்படுகிறார். இவரை தவிர்த்து கிம்மின் மனைவி குறித்தோ அவரது பிள்ளைகள் குறித்தோ பெரிதாக எந்த தகவல்கள் வெளியானதில்லை.

திருமணமாகி பல ஆண்டுகளுக்கு பிறகே கிம்மின் மனைவி ரி சோல் ஜூ வெளியுலகத்துக்கு அறிமுகப்படுத்தப்பட்டார். இந்த நிலையில் கிம் முதல் முறையாக தனது மகளை வெளியுலகத்துக்கு அறிமுகப்படுத்தியுள்ளார். கிம் மகளின் பெயர் கிம் ஜூ அய் என்றும், அவர் கிம்மின் மூத்த மகள் என்றும் நம்பப்படுகிறது.

வடகொரியா வெள்ளிக்கிழமை அமெரிக்கா வரை சென்று தாக்கும் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை சோதித்தது. இந்த சோதனையை கிம் தனது மகள் கிம் ஜூ அய்யுடன் சேர்ந்து நேரில் ஆய்வு செய்துள்ளார். அப்போது எடுக்கப்பட்ட புகைப்படங்களை வடகொரியா அரசு ஊடகம் வெளியிட்டுள்ளது.

சமீபகாலமாக கிம்மின் உடல் நிலை குறித்து பல்வேறு வதந்திகள் பரவி வரும் நிலையில் அவர் தனது மூத்த மகளை வெளியுலகத்துக்கு அறிமுகப்படுத்தியிருப்பதன் மூலம், தனக்கு பிறகு தனது மகள் அதிகாரத்துக்கு வருவதை அவர் சூசகமாக சொல்வதாக சர்வதேச நோக்கர்கள் கருதுகின்றனர். (ஐ)

# 270,000 பேர் தொழில் தேடி வெளிநாடு சென்றனர்!

கொழும்பு, நவ. 21

**இந்த வருட ஜனவரி மாதம் முதல் 2 இலட்சத்து 70 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் வேலைவாய்ப்பை பெற்று பல நாடுகளுக்கு சென்றுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.**

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு தொழிலுக்காக வெளிநாடு செல்பவர்களின் எண்ணிக்கை 150 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருட இறுதிக்குள் குறித்த எண்ணிக்கை 3 இலட்சமாக அதிகரிக்கலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பை பெற்று சென்றுள்ளவர்களில் 60 சதவீதமானவர்கள் ஆண்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளுக்கு செல்பவர்களில் பெரும்பான்மையானவர்கள் விசேட தகைமைகள் எதனையும் கொள்ளாதவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# “அறிவுள்ளோர் நிர்வகித்திருந்தால் இப்படி நெருக்கடி ஏற்பட்டிருக்காது”

கொழும்பு, நவ. 21

நாட்டின் பொருளாதாரத்தை அறிவுள்ளவர்கள் நிர்வகித்திருந்தால் நாடு இவ்வாறான பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்காது என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு எடுக்கப்படும் கடினமான தீர்மானங்களை மக்கள் புரிந்து கொள்வார்கள் என நம்புவதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ)

## மாற்றங்களுடன் பிறப்பு சான்றிதழ்!

கொழும்பு, நவ. 21

பல திருத்தங்களுடன் பிறப்புச் சான்றிதழை வழங்குவதற்கு பதிவாளர் நாயகம் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதன்படி, ஒருவருக்கான தேசிய அடையாள அட்டை இலக்கம் புதிய பிறப்புச் சான்றிதழில் பதியப்படவுள்ளது. அத்துடன், தற்போது காணப்படும் பெற்றோரின் திருமணம் தொடர்பான தகவல்களைப் பதியும் பகுதி நீக்கப்படவுள்ளது. (ஐ)

# கிளைபோசேட் மீதான தடையை நீக்க முடிவு!

கொழும்பு, நவ. 21

கிளைபோசேட் மீதான தடையை நீக்குவதற்கு விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளது.

விவசாய அமைச்சர் மகிந்த அமரவீரவின் கையொப்பத்துடன் வர்த்தமானி அச்சிடுவதற்காக அரசாங்க அச்சகத்தில் கையளிக்கப்பட்டதாக விவசாய அமைச்சின் செயலாளர் குணதாச சமரசிங்க தெரிவித்தார்.

விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர கிளைபோசேட் தடையை தொடர வேண்டுமா, இல்லையா என விவசாயப் பிரதிநிதிகள், வேளாண்மைத்துறை வல்லுநர்கள் உள்ளிட்ட பல்வேறு துறையினரிடமும் கருத்துக்களை கேட்ட பின்னரே கிளைபோசேட் தடையை நீக்க முடிவு செய்யப்பட்டது.

2015ஆம் ஆண்டு முதன் முறையாக இலங்கையில் களைகளை கட்டுப்படுத்துவதற்கான மாற்று வழிமுறைகளை அறிமுகப்படுத்தாமல் க்ளைபோசேட் தடைசெய்யப்பட்டது.

இதையடுத்து, 2018இல் தேயிலை மற்றும் இறப்பரில் கிளைபோசேட் பயன்படுத்த தடை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கசிப்பு உற்பத்தி; தாயும் மகனும் கைது!

யாழ்ப்பாணம், நவ. 21

பொக்கணையில் நீண்ட காலமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட தாய் - மகன் உட்பட மூவர் கோப்பாய் பொலிஸ் பிரிவால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்கரின் கீழ் இயங்கும் யாழ் மாவட்ட புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவல் கிடைத்தது.

இவர்களிடமிருந்து 15 லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைக்காக கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

நீண்ட காலமாக கோப்பாய் பகுதியில் கசிப்பு மற்றும் போதை பொருளுடன்பலர் யாழ். மாவட்ட புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ- 03)

# ஒரு நாள் சேவையின் கீழ் 50 சாரதி அனுமதி பத்திரமே!

கொழும்பு, நவ. 21

ஒரு நாள் சேவையின் கீழ் 50 சாரதி அனுமதிப்பத்திர அட்டைகளை அச்சிட்டு வழங்குவதற்கு தீர்மானித்துள்ளதாக மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க தெரிவித்தார்.

திணைக்களத்தினால் வழங்கப்பட வேண்டிய 6 இலட்சம் தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரங்களுக்கான அட்டைகளை வழங்கும் இலக்கை அடையும் வரை மேற்குறிப்பிட்ட தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நாளொன்றுக்கு 1,700 அட்டைகளை அச்சிடும் திறன் திணைக்களத்துக்கு உள்ளது. இதில், ஒருநாள் சேவையில் 50 அட்டைகளையும் 1,650 அட்டைகளை 6 இலட்சம் தற்காலிக அனுமதிப் பத்திரம் பெற்றவர்களுக்காகவும் அச்சிடவுள்ளதாக ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார்.

திணைக்களத்தின் கொள்ளளவை ஈடுசெய்யும் வகையில் 5 இலட்சம் அட்டைகள் கிடைத்துள்ளதாகவும், கடந்த திங்கட்கிழமை முதல் அட்டைகளை அச்சிட ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (ஐ)

# தானியங்கி முறையில் விரைவில் பஸ்களில் பயணச்சீட்டு வழங்கல்!

கொழும்பு, நவ. 21

பஸ் பயணச்சீட்டுகளை வழங்குவதற்கு புதிய தானியங்கி முறையை அறிமுகப்படுத்தும் முன்மொழிவுக்கு இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அனுமதி வழங்கியுள்ளார் என்று தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

ஒவ்வொருவரும் தங்களின் வங்கிகளின் வரவு அல்லது கடன் அட்டைகள் மூலம் பஸ் கட்டணத்தை செலுத்தும் வகையில் முறைமை அறிமுகப்படுத்தப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

நடத்துநர் இல்லாமல் பஸ்கள் இயக்கப்படும் என்பதால் அவற்றின் பின்பக்க கதவு மூடப்பட்டிருக்கும் என்றும் பயணிகள் தாங்கள் உள்ளே வரும் இடத்தில் பொருத்தப்பட்டிருக்கும் புதிய சாதனங்களில் தங்களது வங்கி அட்டைகளை செலுத்த வேண்டும் - என்றார்.

பஸ்களில் ஜி. பி. எஸ் அமைப்பை அணுகும் திறன் கொண்ட புதிய மின்னணு சாதனங்கள் பொருத்தப்படும் என்றும் அவற்றின் மூலம் கட்டணம் அறவிடப்படும் என்றும் குறிப்பிட்டார்.

வங்கி அட்டை இல்லாத பயணிகள், சாரதிக்கு அருகில் வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் பஸ் கட்டணத்தை பணம் மூலம் செலுத்தமுடியும் எனவும் தெரிவித்தார்.

பஸ் உரிமையாளரின் அனுமதியுடன் சாரதி தமக்கு தேவையான உதவியாளரை வைத்திருக்க முடியும் என்றும் தெரிவித்த அவர், புதிய சாதனங்களை வழங்குவதற்கு மத்திய வங்கி ஏற்பாடு செய்யும் - என்றார். (ஐ)

# போதைப் பொருட்களை சூட்சுமமாக விற்றவர் கைது!

நுவரெலியா, நவ. 21

ஆணுறைகளுக்குள் வைத்து ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப்பொருள்களை விற்பனை செய்த வியாபாரி கைது செய்யப்பட்டுள்ளார்.

நுவரெலியா - தலவாக்கலை ஆகிய பிரதேசங்களில் ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருள்களை விற்ற பிரதான வர்த்தகர் நேற்று முன்தினம் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பலப்பட்டி பிரதேசத்தை சேர்ந்த 42 வயதான சந்தேக நபர், பொதுப் போக்குவரத்து பஸ்களில் பயணித்து, இவ்வாறு போதைப்பொருட்களை விற்பனைச் செய்கிறார் என்று பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்தது.

அவரை சோதனைக்கு உட்படுத்தியபோது, ஆணுறைக்குள் போதைப் பொருட்களை அவர் மறைத்து வைத்திருந்தமை கண்டறியப்பட்டது.

இதையடுத்து அவர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து, 280 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும் 610 மில்லிகிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

உங்கள் துயரங்களை பகிர்ந்துகொள்ள யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தளம்
துயர் .நெற்
THUYAR.NET
துயர் நெற்றில் பிரசுரமாகும் அனைத்து விளம்பரங்களும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும்
ஈழநாடு
Eelanadu
ஈழநாடு தினசரியிலும் வெளியிடப்படும்
யாழ்ப்பாணத்திலிருந்து ஒளிபரப்பாகும்
DAN NEWS
டான் நியூஸ் தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாகும்
விபரங்களுக்கு: thuyar.net Tel: 0094 752 225 225

# ஓமானுக்கு ஆட்கடத்தல் முகவர் ஒருவர் கைதானார்!

கொழும்பு, நவ. 21

ஆட்கடத்தலில் ஈடுபட்ட பிரதான கைது செய்யப்பட்ட பிரதான சந்தேகநபரின் உள்நாட்டு முகவர் சி.ஐ.டியினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, ஓமான் மற்றும் டுபாய் ஆகிய நாடுகளுக்கு ஆட்கடத்தலில் ஈடுபட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பிரதான சந்தேகநபர் எதிர்வரும் 24 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நேற்றுமுன்தினம் நீர்கொழும்பு நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்ட நிலையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சந்கேகநபர் நேற்றுமுன்தினம் இலங்கை திரும்பிய போது கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஐ.எம்.எவ். கடனை இலங்கை பெற மார்ச் வரை காத்திருக்க நேரிடும்!

## பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை

வாஷிங்டன், நவ.21

**இலங்கையுடனான கடன் மறுசீரமைப்பில் முக்கிய இரு தரப்புக் கடனாளியான சீனா அக்கறை காட்டாததால் டிசெம்பரில் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடனைப் பெறுவதற்கு இலங்கையால் உடன்பாடு எட்ட முடியாது என நிதி ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.**

அவ்வாறு நடந்தால் இலங்கை கடனைப் பெற அடுத்த வருடம் மார்ச் மாதம் வரை காத்திருக்க வேண்டியிருக்கும் என அமெரிக்காவின் வாஷிங்டனில் உள்ள ஆய்வாளர்கள் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

2.9 பில்லியன் அமெரிக்க டொலர்கள் விரிவான நிதி வசதியை 4 வருடங்களுக்காக பெற்றுக் கொள்வதற்காக இலங்கை, சர்வதேச நாணய நிதியத்திடம் கோரியிருந்ததுடன், அதற்கான பணியாளர் உடன்படிக்கையை கடந்த செப்ரெம்பர் மாதம் மேற்கொண்டிருந்தது.

அதன் அடுத்த கட்ட நடவடிக்கையாக இலங்கையின் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட வேண்டும், அதற்கான கலந்துரையாடல்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஜப்பானும் இந்தியாவும் அந்த கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருவதாகவும், சீனாவில் 20ஆவது கம்யூனிஸ்ட் கட்சி மாநாடு நடைபெறுவதால், அது குறித்து விவாதிக்க இலங்கைக்கு போதிய சந்தர்ப்பம் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த காலத்துக்குள் இலங்கைக்கு கடன் வசதியை பெற்றுக்கொடுக்க முடியாவிட்டால், நாடு பாரிய பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க நேரிடும் என நிதி ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# மனைவியுடன் தர்க்கித்தவர் மூவரால் அடித்துக் கொலை!

கொழும்பு, நவ. 21

மனைவியுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டவரை மூவர் இணைந்து அடித்துக் கொலை செய்தனர் என்று அறிய வருகிறது.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை மாத்தறை ஊரு பொக்க பொலிஸ் பிரிவில் கடவலகம பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அதே பிரதேசத்தை சேர்ந்த 51 வயது நபரே இவ்வாறு உயிரிழந்தார்.

உயிரிழந்தவருக்கும் அவரின் மனைவிக்கும் இடையே நேற்று அதிகாலை வாக்குவாதம் ஏற்பட்டது. அச்சமயம், அயலில் வசித்த மூவர் கணவரை தாக்கிக் கொன்றனர் என்று அறிய வருகிறது.

இந்தச் சம்பவத்துடன், தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் 32, 30 மற்றும் 19 வயது நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை ஊருபொக்க பொலிஸாரால் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# சீனா வழங்கிய 1000 தொன் அரிசி சனியன்று நாட்டை வந்தடைந்தது

கொழும்பு, நவ. 21

இலங்கைக்கு மேலும் ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை சீனா நன்கொடையாக வழங்கியுள்ளது.

இந்த அரிசியுடன் கப்பல் ஒன்று நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

இந்த அரிசி இலங்கையின் பாடசாலைகளுக்கு விரைவில் விநியோகம் செய்யப்படும் என சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் நாட்களில் இந்த அரிசி விநியோகம் செய்யப்படவுள்ளது. கடந்த ஜூன் மாதம் முதல் இதுவரையில் சுமார் 7000 மெற்றிக் தொன் அரிசியை சீனா வழங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நவ. 27 மாவீரர் நாளை மாற்றியமைக்க எந்தக் கட்சிகளுக்கும் உரிமையில்லை!

## அரியநேத்திரன் தெரிவிப்பு

மட்டக்களப்பு, நவ. 21

நவம்பர் 27ஆம் திகதியை தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் நாளாக மாத்திரம் அனுஷ்டிக்காமல் விடுதலைப் போராட்டத்துக்காக உயிர் நீத்த அனைவரையும் நினைவேந்தி அனுஷ்டிப்போம் என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ள கருத்தை ஒருபோதும் ஏற்க முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் நடத்திய ஊடக சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், மாவீரர் நாள் என்பது விடுதலைப் புலிகளின் போராளிகள் போராடி உயிர் நீத்தமைக்காக வடக்கு, கிழக்கில் உள்ள 33 மாவீரர் துயிலும் இல்லங்களில் விளக்கேற்றி அஞ்சலி செலுத்தும் ஒரு தனித்துவமான நினைவு வணக்கம்.

கார்த்திகை 27ஆம் திகதியை பிரகடனப்படுத்தி கடந்த 1989 ஆம் ஆண்டு கார்த்திகை 27 ஆம் திகதி தொடக்கம் மாவீரர் நாள் நினைவு கூரப்படுகின்றது. பொதுமக்கள் பெருமளவாக முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த தினம் 2009ஆம் ஆண்டு மே 18 ஆம் திகதி என்பதால் மே 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவு வணக்க நாள் அனுஷ்டிக்கப்படுகின்றது.

கஜேந்திரகுமாரின் கருத்துப்படி பொதுமக்கள், மாவீரர்கள், ஏனைய இயக்கப் போராளிகள் எல்லோரையும் நினைவேந்தி பொதுவாக கார்த்திகை 27ஆம் திகதி அனுஷ்டிப்பதாயின் முள்ளிவாய்க்கால் மே 18 நினைவு தினம் செய்யத் தேவை இல்லை அல்லவா?

ஒரு விடுதலை இயக்கத்தால் தொடர்ந்து பேணப்பட்டு வந்த நடைமுறையை அந்த விடுதலை இயக்கம் தற்போது மௌனித்து விட்டது என்பதற்காக அந்த நினைவு நாளை இப்போது உள்ள தனிநபராலோ அல்லது பொது அமைப்புக்களாலோ அல்லது அரசியல் கட்சிகளாலோ அதனை மாற்றுவது அல்லது வேறு ஒன்றை அதனுடன் கலப்பது மாவீரர் தினத்தின் புனிதத்தன்மையைக் களங்கப்படுத்துவதாகவே அமையும்.

எனவே, தனித்துவமான மாவீரர் நாளை தனித்துவமாக நினைவு கூருவதே சிறப்பு. இலங்கை அரசாங்கத்திற்காகவோ, இராணுவக் கெடுபிடிகளுக்காகவோ இந்த தினங்களை உத்தியோகபூர்வமாக மாற்றுவதற்கு எந்த அரசியல் கட்சிகளுக்கும் உரிமை இல்லை - என்றார். (ஐ)

# ரயில்கள் பயணிக்கும் 850 பாலங்களில் பழுது

கொழும்பு, நவ. 21

ரயில்கள் பயணிக்கும் 1,375 ரயில் பாலங்களில் 850 பாலங்கள் தற்போது பழுதடைந்துள்ளன என்று புகையிரதத் திணைக்கள தகவல்கள் தெரிவித்துள்ளன.

நூறு ஆண்டுகளுக்கு முன்னர் ஆங்கிலேயர் ஆட்சியில் கட்டப்பட்ட ஏராளமான பாலங்கள் தற்போது பழுதடைந்துள்ளன.

இந்தப் பாலங்களில் பதுளை - தெமோதர ஒன்பது வளைவு பாலம் உட்பட பல பழைமையான ரயில் பாலங்களும் உள்ளடங்குவதாகவும் வேக வரம்புகளுக்கு உட்பட்டு இந்த பாலங்களின் ரயில்கள் இயக்கப்படும் என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

புகையிரதத் துறையில் பணியாளர் வெற்றிடங்கள் மற்றும் அந்நியச் செலாவணி நெருக்கடி ஆகியனவே புகையிரதத் துறையின் கட்டமைப்பின் சரிவுக்கு காரணமாக உள்ளன.

ரயில் தண்டவாளங்கள் பற்றாக்குறையால், சீனாவிடமிருந்து 10,000 ரயில் தண்டவாள கட்டைகளை பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவை அடுத்த வருடம் மார்ச் மாதத்தில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மக்களின் போராட்டத்துக்கு படையினர் மௌமாக ஆதரவு

## இப்படி கூறுகிறார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, நவ. 21

அன்று 30 வருடகால யுத்தத்தில் இருந்து நாட்டைக் காப்பாற்றிய இராணுவம், இன்று நாட்டை அழித்த கும்பலை வீட்டுக்கு அனுப்புவதற்காக மக்கள் வீதியில் இறங்கியபோது அவர்கள் மீது ஒரு தோட்டாவைக் கூட பிரயோகிக்கவில்லை.

- இப்படி கூறியிருக்கிறார் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ.

கம்பஹா மாவட்ட ஐக்கிய இராணுவ சக்தியின் கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

முப்படைகளின் தலைமையிலான படைத் துறையினர் மக்கள் போராட்டத்துக்கு மௌனமாக இருந்து பங்களிப்பை வழங்கினர். நமது நாட்டின் படையினர் என்பது நாட்டு மக்களுடன் ஒன்றிணைந்த ஒரு பகுதியினர்.

அன்று அதிகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக பல்வேறு வாக்குறுதிகளை வழங்கி இராணுவத்தினரின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதாக செயல்பட்ட அரசாங்கம், அவற்றில் ஒன்றையாவது வழங்கியதா? என்றும் கேள்வி எழுப்பினார்.

மேலும், ஜனாதிபதித் தேர்தல் காலப்பகுதியில் தான் அனைத்து படையினருடனும் சமூக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதாகக் கூறினார்.

அத்துடன், இது சந்தர்ப்பவாத ஒப்பந்த



மல்ல எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், நிலையான தீர்வுகள் மூலம் இராணுவத்தினரை வலுவூட்டுவதே இதன் நோக்கம் என்றும் சொன்னார். (ஐ)

## வரவு - செலவு...

பொதுஜன பெரமுன எந்தவித நிபந்தனைகளையும் முன்வைக்கவில்லை என்றும் கூறினார்.

மொட்டுக் கட்சியின் ஆதரவுடன் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டதாகவும் இதன் காரணமாகவே இரு தரப்புக்கும் இடையில் பரஸ்பர புரிந்துணர்வுடன் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஒரு கட்சி என்ற ரீதியில் நாம் இந்த நேரத்தில் வரவு செலவுத் திட்டத்தை ஆதரிப்பதுடன் நாட்டை எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு எங்களால் முடிந்த ஆதரவை வழங்குகிறோம்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி என்ற ரீதியில் இந்த ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படுவதற்கு எந்தவொரு நிபந்தனையும் விதிக்கப்படவில்லை.

நாங்கள் ஜனாதிபதியுடன் ஒற்றுமையாக செயல்படுகின்றோமே தவிர வேலை செய்வதற்கு எமக்கு நிபந்தனைகள் இல்லை. மொட்டுக் கட்சியின் பூரண ஆதரவுடன் நாட்டின் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டார்.

நாட்டின் தற்போதைய நிலைவரப்படி, இந்த நேரத்தில் அரசு நலன்புரி பட்ஜெட் தாக்கல் செய்யவில்லை என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். பொதுநலன் செய்யும் நேரம் இதுவல்ல. செலவைக் குறைத்து, வருவாயைப் பெருக்கி, பொருளாதாரத்தை வளர்த்து, நாட்டு மக்கள் எதிர்நோக்கும் சூழ்நிலையிலிருந்து மீட்கப் பாடுபட வேண்டிய நேரம் இது.

கடந்த காலத்தில் நாம் கடன் வாங்கியிருக்கிறோம் அல்லது போர் செய்திருக்கிறோம். 88-89 காலகட்டத்தில் நடந்த விரும்பத்தகாத நிகழ்வுகளுக்கு இழப்பீடு வழங்கியுள்ளோம். இல்லையெனில் நேரத்தை வீணடித்துள்ளோம். ஆனால், நாட்டின் வளர்ச்சிக்கு மிகக் குறைந்த பணமே செலவிடப்பட்டுள்ளது.

இந்த கடனில் இருந்து நாட்டை மீட்டெடுக்க விரும்புகிறோம். வங்குரோத்து என்ற பெயரை எடுத்துக் கொண்டு நாட்டை பொருளாதார ரீதியில் பலப்படுத்தும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த நம்புகிறோம்.

இந்த நேரத்தில் எதிர்க்கட்சியில் உள்ள எத்தனை பேர் அரசாங்கத்துடன் இணைந்து கொள்ள தயாராக உள்ளனர் என்பது எனக்கு சரியாகத் தெரியாது. ஆனால், சஜித் பிரேமதாஸ மிகவும் பயந்துள்ளார் என்பது புரிகிறது. வரவு செலவுத் திட்டத்தின் பின்னர் அமைச்சுப் பதவிகள் மாற்றப்படுமா இல்லையா என்பது ஜனாதிபதியுடனும் அரசாங்கத்துடனும் இணைந்து செயல்படும் கட்சிகள் எடுக்கும் தீர்மானங்களுக்கு அமைய தீர்மானிக்கப்படும். நான் இதுவரை மனப்பூர்வமாக அப்படி ஒரு முடிவை எடுக்கவில்லை - என்றார். (ஐ)

## 13ஐ இழந்தால்...

ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்பின் தலைவர் பத்மநாபாவின் 71ஆவது பிறந்தநாளை முன்னிட்டு தமிழர் சமூக ஜனநாயக கட்சியின் அலுவலகம் மட்டக்களப்பு வீச்சுகல்முனையில் சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும்,

இந்திய அரசியல் யாப்பின் பிரதியாக 1987ம் ஆண்டு கொண்டுவந்த 13ஆவது திருத்த சட்டம் ஊடாகக் கொண்டு வரப்பட்ட அதிகாரங்கள் வடக்கு - கிழக்கில் முழுமைப்படுத்தப்பட வேண்டும். அதில் நிலம், நிதி, சட்டம் ஒழுங்கு அதிகாரங்கள் செயல்படுத்த வேண்டும்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு எங்களுக்கு உத்தியோக பூர்வமான அழைப்பு விடுக்கவில்லை. அது ஒரு தந்திரோபாய அழைப்பே தவிர, அது விசுவாசமான அழைப்பு அல்ல சமஷ்டி என்று சொன்னால் நாங்கள் 13ஆவது திருத்தச் சட்டத்தை தவிர வேறு ஒன்றையும் கதைக்க வில்லை - கதைப்பது முட்டாள்தனம்.

13ஆவது திருத்தச் சட்டம் - மாகாண சபை முறைமை முழுமைபடுத்துவது நாங்கள் முதல்படி என்றால் அவர்கள் இரண்டாம்படி என்பார்கள். நாங்கள் முட்டாள்தனமாக கதைக்க முடியாது. 13இல் உள்ள அதிகாரங்களை முழுமைப் படுத்துமாறு கேட்கவேண்டும். அதனை முழுமைபடுத்தினால் கணிசமான விடயங்கள் வரும்.

அதற்குள் இருக்கின்ற விடயங்களை நியதி சட்டங்களாக்கி அதனை புதுப்பித்து எடுக்கவேண்டும். அதனை முதலில் செய்யவேண்டும். அதனை விடுத்து அதை இல்லாமல் செய்து விட்டு புதிதாக கேட்பது ஜென்மத்திலும் நடக்காது. இது தமிழ் அரசியல் தலைவர்களுக்கு தெரியாதது அல்ல.

இந்த 13ஆவது திருத்தச் சட்ட மூலம் - மாகாண சபை முறை இல்லாமல் போவதற்கான ஓர் அபாயகரமான நிலை இருக்கின்றது. அதனை இல்லாமல் செய்தால் நாங்கள் நிற்பதற்கான இடமும் இல்லாமல் போய்விடும் என்ற அபாயம் இருக்கின்றது. அந்த அபாயத்தை விளங்கி கொள்ளாமல் தமிழ் அரசியல் தலைவர்கள் சமஷ்டி என வேறுவேறு தீர்வுகளை பேசிக் கொண்டிருப்பது மிக ஆபத்தான விடயம் - என்றார். (ஐ)

## வெளிநாட்ட...

அவற்றை சட்டரீதியில் மீளப் பெற வேண்டும் என்று புலம்பெயர்ந்து நோர்வேயில் வசிக்கும் நபரிடம் 12 கோடி ரூபாயை 23 வங்கி கணக்குகள் மூலமாக ஏமாற்றி பெற்றுள்ளனர்.

இந்தப் பணத்தை அவர்கள் 2021 ஜனவரி முதல் ஜூன் வரையான காலப் பகுதிக்குள் பெற்றுள்ளனர். இவ்வாறு 23 கணக்குகளில் பெறப்பட்ட பணத்தின் ஒருபகுதி இன்னொரு நபரின் கணக்குக்கு மாற்றப்பட்டதாக தெரிய வருகிறது.

மேலும் கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து யாழ்ப்பாணத்தை சேர்ந்த நீதிபதிகள், வங்கி முகாமையாளர்கள், சட்டத்தரணிகள் மற்றும் கிராம சேவகர்கள் உள்ளிட்ட பல அதிகாரிகளின் முத்திரைகள் மற்றும் கையொப்பங்கள் அடங்கிய போலி ஆவணங்கள், மோசடிக்கு பயன்படுத்திய வங்கி புத்தகங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவர்களிருவரையும் எதிர்வரும் டிசெம்பர் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## ஏப்ரலுக்கு...

யாளர் சந்திப்பிலேயே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

சாதாரண தரப் பரீட்சையை அடுத்த வருடம் ஏப்ரலில் நடத்த எதிர்பார்த்தாலும், க. பொ. த உயர்தரப் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டமையால், மேலும் தாமதம் ஏற்படுவது தவிர்க்க முடியாதது - என்றார்.

மேலும், பல தரப்பினரின் கோரிக்கைகளை கருத்தில் கொண்டு உயர்தரப் பரீட்சையை ஒத்திவைக்க தீர்மானித்ததாகவும் உயர்தரப் பரீட்சை ஜனவரி 17ஆம் திகதி ஆரம்பமாகும். இதே வேளை புலமைப்பரிசில் பரீட்சை அறிவிக்கப்பட்டபடி டிசெம்பர் 18ஆம் திகதி நடைபெறும் எனவும் கூறினார். (ஐ)

# மக்களாணை மூலமாக மட்டுமே பிரச்னைகளுக்கு தீர்வு காணலாம்!

**அநுரகுமார திஸநாயக்க**

கொழும்பு, நவ. 21

அரச நிவாணரங்கள், மற்றும் சலுகைகளை அனுபவித்து அரச சொத்துக்களை கொள்ளையிட்டமையாலேயே நாடு இன்று வங்குரோத்து அடைந்துள்ளது. மேலும் நாடு பெரும் பொருளாதார நெருக்கடிக்கும் அதன் விளைவாக ஏற்பட்டிருக்கும் சவால்களுக்கும் காரணமானவர்கள் ரணில் உள்ளிட்ட அரசாங்கத்தில் உள்ள தரப்பினராவர்.

வங்குரோத்து அடைந்துள்ள நாட்டை மீளவும் கட்டியெழுப்ப அரசாங்கத்தினால் முடியாது மாறாக நாட்டின் பொருளாதாரம் கட்டியெழுப்பப்பட வேண்டுமானால் மக்களாணை மூலம் புதிய அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

மேலும், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பதவிக்கு வந்த பின்னர் நாட்டில் காணப்பட்ட எரிபொருள் வரிசைகள், எரிவாயு வரிசைகள் குறைந்துள்ளன.

ரணில் பிரச்னைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுத்துள்ளார் என்று பலரும் கூறுகிறார்கள். ஆனால், நிலைமை அது வல்ல. கடந்த ஏப்ரல் மாதம் தொடக்கம் இன்று வரையில் உலக நாடுகளுக்கு நாம் சுமார் 320 டொலர் கோடி செலுத்த வேண்டியுள்ளது. அடுத்த வருடம்நாடு 650 கோடி டொலர் வெளிநாட்டு கடன்களை செலுத்த வேண்டும்.இந்த நெருக்கடிகளை உருவாக்கியவர்கள் ரணில் போன்றவர்கள்.

எனவே மக்களாணை மூலம் புதிய அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட வேண்டும். நெருக்கடிகளால் வங்குரோத்து நிலையை அடைந்துள்ள நாட்டை தோல்வியடைந்த ஜனாதிபதிகளால் மீளவும் கட்டியெழுப்ப முடியாது என்று சனிக்கிழமை நடந்த தேசிய மக்கள் சக்தியின் நிகழ்வில் அவர் தெரிவித்தார். (ஐ)

## தமிழ்த் தேசிய...

உறுப்பினர்களுடன் பேசவுள்ளதாக ஜனாதிபதி கூறியிருந்தார். இதைத் தொடர்ந்து, பேசப்பட வேண்டிய விடயம் தொடர்பில் கலந்துரையாட வருமாறு எம். ஏ. சுமந்திரன் எம். பி. தமிழ் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

அவர் விடுத்த அழைப்பு சர்ச்சையானதைத் தொடர்ந்து அந்த சந்திப்பு நடைபெறவில்லை. இந்நிலையில், தமிழ்த் தேசியக் கட்சிகளை அழைக்கும் பொறுப்பு தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராசாவிடம் வழங்கப்பட்டது.

அவரின் ஒழுங்கமைப்பின்படி, தமிழ்த் தேசியக் கட்சிகள் பல சந்தித்துப் பேச இணங்கியுள்ளன. இதன்படி, எதிர்வரும் 25ஆம் திகதி விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி, சுரேஷ் பிறேமசந்திரனின் ஈ. பி. ஆர். எல். எவ்., என். சிறீகாந்தாவின் தமிழ்த் தேசியக் கட்சிகள் இந்த சந்திப்பில் பங்கேற்கும் என்று அறிய வருகிறது. (ஐ)

## மாவீரர்...

வடைந்த நாளான (1982) நவம்பர் 27ஆம் திகதி மாவீரர் நாளாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. 1989ஆம் ஆண்டு முதல் மாவீரர் நாள் பிரகடனப்படுத்தப்பட்டு கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

2009 போர் முடிவுக்கு வந்த பின்னர் மாவீரர் நாளை கடைப்பிடிப்பதற்கு தடை காணப்பட்டது. எனினும், 2015 ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து மாவீரர்களை நினைவுகூர விதிக்கப்பட்டிருந்த தடை விலக்கப்பட்டது. இந்நிலையில், மீண்டும் ஏற்பட்ட ஆட்சிமாற்றம் முதல் மாவீரரை நினைவுகூரத் தடைகள் கட்டுப்பாடுகள் - ஏற்படுத்தப்பட்டன. எனினும், நீதிமன்றின் அனுமதியுடன் மாவீரர் நாளை கடைப்பிடிக்கப்பட்டபோதும் இராணுவத்தினரின் கெடுபிடிகள் காணப்பட்டன.

இந்நிலையில், ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதைத் தொடர்ந்து மாவீரர்களை நினைவுகூர விதிக்கப்பட்ட தடைகளில் தளர்வு ஏற்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து தமிழ் பேசும் மக்களின் தாயகமான வடக்கு - கிழக்கில் மாவீரர்களை நினைவுகூருவதற்கு தமிழ் மக்கள் தயாராகி வருகின்றனர். இதையொட்டிய ஏற்பாடுகள் ஏற்கனவே பல இடங்களிலும் ஆரம்பமாகியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## நீரில்...

மனையில் சேர்ப்பித்தனர். ஆனால், யுவதி ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று அங்கு தெரிவிக்கப்பட்டது.

யுவதியின் உடலம் பிரேத பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-02-03)

## நாடு...

எதிர்ப்புகளை அடுத்து ஜூன் 9ஆம் திகதி பாராளுமன்ற உறுப்புரிமையை துறந்தார். எனினும், ஜூலை மாதத்தில் ஜனாதி பதியாகவிருந்த கோட்டாபயவும் பதவி விலகினார். இதைத் தொடர்ந்து கடந்த செப்ரெம்பர் மாதம் நாட்டை விட்டு பஸில் ராஜபக்ஷ வெளியேறி, அமெ ரிக்கா சென்றார்.

கடந்த இரு மாதங்களாக அவர் அமெரிக்காவில் தங்கியிருந்த நிலையில் நேற்று அவர் நாடு திரும்பினார். சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்பினர்கள் அவரை நேரில் சென்று வரவேற்றனர்.

இவரின் வருகை - குறிப்பாக வரவு - செலவு திட்டத்துக்கு முன்னதாக அவரின் வருகை நாட்டின் அரசியலில் பெரும் பரபரப்பு ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

## வடக்கில்...

கட்டமைப்பு, மீள் காடாக்கல் என்பவை கவனம் செலுத்திய ஜனாதிபதி, கொழும்பு, அம்பாந்தோட்டை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலும் பசுமை ஐதரசன் தொழில்நுட்ப திட்டம் முன்னெடுக்கப்படும் என்று ஜனாதிபதி கூறினார்.

பசுமை திட்டங்கள் மூலம் வடக்கின் பொருளாதாரத்திலும் மாற்றங்களை ஏற்படுத்த முடியும் என்றும் ஜனாதிபதி நம்பிக்கை வெளியிட்டார்.

தவிர, வடக்கின் கடல்நீர் சுத்திகரிக்கும் திட்டம் மூலமாக வறட்சியான கால நிலையை வெற்றிகரமாக எதிர்கொள்ள முடியும் என்று கூறிய ஜனாதிபதி நாட்டின் வனவளம், நீர் மூலாதாரங்களை பாதுகாப்பதன் அவசியத்தையும் சுட்டிக் காட்டினார்.

மேலும், சிறிய நீர்மின் திட்டங்களுக்கான இடங்களை கண்டறியவும் அதிகாரிகளை பணித்தார்.

ஜனாதிபதியின் மன்னார் பயணத்தில் கடற்றொழில் அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா, மின்சக்தி வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர, வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, கிராமிய பொருளாதார அமைச்சர் காதர் மஸ்தான் ஆகியோரும் உடனிருந்தனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu











# உலகக் கிண்ண உதைபந்தாட்டம் நேற்று கோலாகலமாக ஆரம்பம்!

டோஹா, நவ. 21

உலகக் கிண்ண உதைபந்தாட்டம் கட்டாரில் நேற்று கோலாகலமாக ஆரம்பமானது. பிரபல நடிகர் மோரகன் பிரிமன் உள்ளிட்டவர்கள் தொடக்கவிழாவில் பங்கேற்றனர்.

தொடக்க நிகழ்வில், டிகர் மோர்கன் பிரிமன் குர்-ஆன் வாசிப்பு மூலம் புகழ்பெற்ற மாற்றுதிறனாளியான அல் - முஸ்தபாவுடன் இணைந்து மேடையில் ஆச்சரியம் அளிக்கும் வகையில் தோன்றினார்.

நிகழ்வில் நூற்றுக்கணக்கான நடனக் கலைஞர்கள் பங்கேற்றனர். (ஐ)



## தேவை

பிரபல தனியார் நிறுவனம் ஒன்றின் விளம்பர பகுதியில் பணியாற்றுவதற்கு ஆட்கள் தேவை.

தொடர்புகளுக்கு :

077 311 9298, 075 313 2805



## உலகக் கிண்ண உதைபந்து:

# வலென்சியாவின் அதிரடியால் முதல் வெற்றி ஈக்குவடோர் வசம்!

டோஹா, நவ. 21

உலகக் கிண்ணத்தின் முதல் போட்டியில் கட்டாரை வீழ்த்தி வெற்றி பெற்றது ஈக்குவடோர் அணி.

உலகக் கிண்ண உதைபந்தாட்ட தொடர் நேற்று கட்டாரில் ஆரம்பமானது. முதலாவது போட்டியில் தொடரை நடத்தும் கட்டாரும் ஈக்குவடோரும் மோதின.

போட்டியின் ஆரம்பம் முதலே ஈக்குவடோர் ஆதிக்கம் செலுத்தியது. ஆட்டத்தின் 53 வீதம் பந்தை தங்கள் கால்களின் கீழேயே வைத்திருந்து ஆட்டத்தை தம்பக்கம் ஈர்த்தார்கள். அந்த வீரர்கள்.

நேற்றைய போட்டியில் முறையற்ற ஆட்டங்களும் அதிகமாகவே இடம்பெற்றன. இதற்காக ஈக்குவடோரின் இரு வீரர்களும் கட்டாரின் 4 வீரர்களும் மஞ்சள் அட்டை காட்டப்பட்டு எச்சரிக்கப்பட்டார்கள்.

ஈக்குவடோர் அணிக்காக 16ஆவது நிமிடத்தில் என்னர் வலென்சியா தண்டனை உதை மூலமாக கோல் அடித்தார்.

தொடர்ந்து 31ஆவது நிமிடத்திலும் அவர் கோல் ஒன்றைப் போடவே முதல் பாதி ஆட்டத்தலேயே ஈக்குவடோர் 2 - 0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

தொடர்ந்த இரண்டாவது பாதி ஆட்டத்தில் ஈக்குவடராலும் கோல் அடிக்க முடியவில்லை. கட்டாராலும் பதில் கோல் போட முடியவில்லை. இறுதியில் 2 - 0 என்ற கோல் கணக்கில் ஈக்குவடோர் போட்டியை வெற்றி கொண்டது. (ஐ)

# புதிய விடியல் உதைபந்தாட்ட தொடர் சென். மேரிஸ், யங்ஹென்றிஸ் வெற்றி!

யாழ்ப்பாணம், நவ. 21

புதிய விடியல் உதைபந்தாட்ட தொடரில் சென். மேரிஸ் அணி மெலிஞ்சிமுனை அணியையும் யங்ஹென்றிஸ் அணி கலைவாணி கழகத்தையும் வெற்றி கொண்டன.

டான் தொலைக்காட்சி குழுமத்தின் அனுசரணையில் யாழ். உதைபந்தாட்ட லீக் நடத்தும் "புதிய விடியல்" உதைபந்தாட்டப் தொடர் நடக்கிறது.

இரண்டாவது சுற்றுப் போட்டிகள் தற்போது நடந்து வருகின்றன. இதில், நேற்று துரையப்பா பொது விளையாட்டரங்கில் இரு போட்டிகள் நடைபெற்றன.

முதல் போட்டியில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகமும் தீவகத்தின் மெலிஞ்சிமுனை கழகமும் மோதின.

சமபலம் பொருந்திய அணிகளின் மோதலாக இந்தப் போட்டி நீடித்தது. எனினும், போட்டி முடிவதற்கு ஓரிரு நிடங்கள் இருக்கையில் சென். மேரிஸ் அணி ஒரு கோலைப் போட்டது. மெலிஞ்சிமுனை அணியால் பதில் கோல் போட முடியாது போகவே சென். மேரிஸ் அணி 1 - 0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவது போட்டியில், இளவாலை யங்ஹென்றிஸ் அணியும் கலைவாணி விளையாட்டுக் கழகமும் மோதின. விறுவிறுப்பாக நடந்த இந்தப் போட்டியில் யங்ஹென்றிஸ் அணி 4 கோல்களை அதிரடியாகப் போட்டது. கலைவாணி அணி பதில் கோல் எதுவும் அடிக்கவில்லை. இறுதியில் யங்ஹென்றிஸ் 4 -0 என்ற கோல் கணக்கில் போட்டியை வெற்றி கொண்டது. (ஐ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.11.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.